# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1949/9 - 2016 ජනවාරි මස 11 වැනි සඳුදා - 2016.01.11

*1949/9 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## துணைவிதிகள்

**கிழக்கு மாகாண மாகாண சபை**

துணைவிதிகள்

**மண்முனை மேற்கு பிரதேச சபை**

*1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவு (1) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1989ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள்) சட்டத்தின் பிரிவு 2 இனால் கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சராகிய நஸீர் அகமட் ஆகிய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைவாக, 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 126 விடயம் (VII) (ஊ) மற்றும் (XXX) இன் கீழ் **மண்முனை மேற்கு** பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்டுள்ள **விளம்பர அறிவித்தல்களை** ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகள் என்னால் அங்கீகரிக்கப்பட்டமையை பகிரங்கப்படுத்த இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

*நஸீர் அகமட்,*
*கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும்*
*உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்.*

*கிழக்கு மாகாண முதலமைச்சுச் செயலகம்,*
*உட்துறைமுக வீதி,*
*திருகோணமலை,*
*2015, நவெம்பர் 06.*

**விளம்பர அறிவித்தல்கள் பற்றிய துணைவிதிகள்**

இத்துணைவிதிகள் இதனகத்துப்பின்னர் பிரதேச சபை எனக் குறிக்கப்படும் **மண்முனை மேற்கு** பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் விளம்பர அறிவித்தல்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வைசெய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. பிரதேச சபையினால் காலத்திற்குக்காலம் விளம்பர அறிவித்தல்கள் தொடர்பில்-

(அ) பிரதேச சபைப் பிரதேசத்தில் விளம்பர அறிவித்தல்களை காட்சிக்கு வைப்பதற்காக அளிக்கப்படும் பிரதேசங்கள் அல்லது இடங்கள் எவையென தீர்மானிக்கப்படும்.

(ஆ) விளம்பர அறிவித்தல்களை காட்சிக்கு வைக்கும் பொருட்டு அளிக்கப்படும் பிரதேசங்கள் அல்லது இடங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அறிவித்தல் மூலம் வர்த்தமானியில் வெளியிடுதல் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் தவிசாளரின் பணியாக அமைவதோடு அத்தகைய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியாகிய தினத்திலிருந்து அதில் திட்டவட்டமாக காட்டப்பட்டுள்ள ஏதேனும் எதிர்வரும் தினத்திலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

3. (அ) 2ஆவது துணைவிதியின் கீழ் பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஏதேனும் பிரதேசத்தில் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியிலோ அல்லது பிரதேச சபையினால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கிணங்க பெறப்படுகின்ற வேறு எவரேனும் ஆளுக்குச் சொந்தமான காணியிலோ விளம்பர அறிவித்தல்களைக் காட்சிக்கு வைக்கத்தக்க காட்சிப் பலகைகளை அமைத்துப் பேணிவருவதற்கான அதிகாரம் பிரதேச சபைக்கு இருத்தல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின் கீழ் பிரதேச சபையினால் அமைக்கப்பட்டுள்ள ஏதேனும் காட்சிப் பலகையில் விளம்பர அறிவித்தலொன்றை காட்சிக்கு வைப்பதற்காக பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறான கட்டணத்தைக் காட்சிக்கு வைப்பவர்களிடமிருந்து அறவிடுவதற்கான அதிகாரத்தை பிரதேச சபை கொண்டிருத்தல் வேண்டும்.

4. (அ) தவிசாளரால் அக்கருமத்திற்காக இங்கு முதலாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கமைவான செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமொன்று இருந்தாலேயொழிய எவரேனும் ஆளினால் பிரதேச சபைப் பிரதேசத்தில் பகிரங்க இடங்களிலிருந்து பார்க்கும்போது புலப்படக்கூடியதாக எந்தவொரு விளம்பர அறிவித்தலையும் காட்சிப்படுத்துதலோ காட்சிக்கு வைக்கச் செய்வித்தலோ ஆகாது.

(ஆ) விளம்பர அறிவித்தலொன்றைக் காட்சிக்கு வைப்பதற்காக பெறப்பட்டிருந்த செல்லுபடியான ஏதேனுமொரு அனுமதிப்பத்திரத்தில் பகிரங்க இடமொன்றிலிருந்து பார்க்கும்போது புலப்படக்கூடியவாறு ஏற்புடையதாக திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள இடமொன்றில் அல்லது இடங்களைத் தவிர வேறு எந்த இடத்திலும் காட்சிக்கு வைக்கப்படுவதோ அவ்வாறு வைக்கச் செய்வித்தலோ ஆகாது.

5. இத்துணைவிதிகளின் கீழ் விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி அவ்வனுமதிப்பத்திரத்தில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் மாத்திரம் செல்லுபடியானதாதல் வேண்டும்.

6. ஏதேனும் விளம்பர அறிவித்தலொன்றைக் காட்சிக்கு வைப்பதற்கான அனுமதிப்பத்திரம் தேவைப்படுகின்ற ஒவ்வோர் ஆளினாலும் குறைந்த பட்சம் அத்தகைய அறிவித்தலை காட்சிக்கு வைக்கக் கருதுகின்ற தினத்திற்கு 2 வேலை நாட்களுக்கு முன்னராக இங்கு காட்டப்பட்டுள்ள இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாகத் தயாரித்த விண்ணப்பப் பத்திரமொன்றைத் தவிசாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. இத்துணைவிதிகளில் குறிப்பிடப்பட்ட பணிப்புக்களை அவ்வண்ணமே விண்ணப்பதாரி பூர்த்திசெய்திருந்தாலேயொழிய தவிசாளர் எவ்விதமான விளம்பர அறிவித்தலையும் காட்சிக்கு வைப்பதற்கான அனுமதிப்பத்திரத்தை விநியோகிக்க மாட்டார். —

(அ) 2 ஆவது துணைவிதியில் குறிப்பிட்டவாறு பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்பட்ட வலயத்தைச் சேர்ந்த இடமொன்றில் காட்சிக்கு வைப்பதற்கான கோரிக்கையாக விண்ணப்பம் அமைதல் வேண்டும் ;

(ஆ) அறிவித்தலை காட்சிக்கு வைக்கக் கோருகின்ற இடத்திற்கான விண்ணப்பம் பிறிதொருவருக்கு முன்னர் விநியோகித்த அனுமதிப்பத்திரமொன்றின் செல்லுபடியாகும் காலவரையறை நிறைவடைந்திருத்தல் வேண்டும். ஆயினும், முன்னர் விநியோகிக்கப்பட்ட அத்துடன் தொடர்ந்தும் செல்லுபடியாகின்ற அனுமதிப்பத்திரத்தின் கீழ் காட்சிக்கு வைக்கப்படுகின்ற ஏதேனும் அறிவித்தல் பலகையில் குறிப்பிடப்பட்ட அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட தடையேற்படாத வண்ணம் அதற்கு அருகில் அறிவித்தல் பலகையொன்றை காட்சிக்கு வைப்பதற்கான அனுமதிப்பத்திரமொன்றை விநியோகிக்க அந்த ஏற்பாடு தடையாக அமைதல் ஆகாது.

(இ) காட்சிக்கு வைப்பதற்கான அனுமதிப்பத்திரம் கோரப்பட்டுள்ள அறிவித்தல் ஆபாசமான அல்லது அருவருக்கத்தக்க அல்லது பண்பற்ற அல்லது ஏதேனும் கலாசாரத்திற்குப் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற அல்லது ஏதேனும் சமயப்பிரிவிற்கோ இனப்பிரிவிற்கோ அல்லது சமூகத்திற்கோ பாதிப்பினை ஏற்படுத்துகின்றதாக அல்லது அத்தகைய நிலைமையை தோற்றுவிக்கக்கூடிய வகையிலான காட்சியோ பதங்களோ உள்ளடக்கப்படுகின்ற வகையிலான அறிவித்தலாக அமைதல் ஆகாது.

(ஈ) 3ஆவது துணைவிதியின் கீழ் பிரதேச சபையினால் நிர்மானிக்கப்பட்டுள்ள காட்சிப் பலகையொன்றில் காட்சிக்கு வைக்க அனுமதிப் பத்திரமொன்று கோரப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அத்தகைய காட்சிப் பலகையில் அந்த விளம்பர அறிவித்தலைக் காட்சிக்கு வைக்கப் போதியளவு இடவசதி இருக்க வேண்டுமென்பதோடு, அத்தருணமாகும் வேளையிலும் முன்னர் விநியோகிக்கப்பட்ட ஏதேனும் அனுமதிப் பத்திரத்தின் கீழ் காட்சிப்படுத்தப்படுகின்ற விளம்பர அறிவித்தலுக்காக ஒதுக்கப்பட்ட காலப்பகுதி நிறைவடைத்திருத்தலும் வேண்டும்.

(உ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தடைவிதிக்கப்பட்டுள்ள அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வகையான விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைத்தல் இடம்பெறல் ஆகாது.

(ஊ) அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு சமர்ப்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரமும் 210 மி.மீற்றர் X 297 மி.மீற்றர் அளவிலான கடதாசியில் 1:1000 அளவுத்திட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விளம்பர அறிவித்தல் மாதிரியுடனும் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்தக் கருதியுள்ள இடத்தின் அல்லது இடங்களின் 210 மி.மீற்றர் X 297 மி.மீற்றர் அளவிலான கடதாசியில் 1:1000 அளவுத்திட்டத்தில் வரையப்பட்ட திட்டவரைபடமும் /திட்டவரைபடங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், விளம்பர அறிவித்தலின் உண்மையான நீளமும் அகலமும் அதில் குறிக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

(எ) விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைக்கப்படுகின்ற இடங்கள்,-

(i) பிரதேச சபையினால் 3ஆவது துணைவிதியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட காட்சிப் பலகையாக அமையுமிடத்து அக்காட்சிப்பலகையில் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவதற்காக அத்துணைவிதியின் (ஆ) பந்தியின் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டணத்தை பிரதேச சபைக்கு செலுத்தியிருத்தல் வேண்டும் ; இன்றேல்,

(ii) விண்ணப்பதாரி அல்லாத வேறு ஆளுக்கோ ஏதேனும் அதிகாரசபைக்கோ சொந்தமான இடமாக அமையுமிடத்து அந்த ஆளினால் அல்லது அதிகாரசபையினால் அத்தகைய விளம்பர அறிவித்தலை அந்த இடத்தில் காட்சிப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துகின்ற எழுத்திலான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

8. விளம்பர அறிவித்தலுக்கு அருகில் பயணஞ் செய்கின்ற எவரேனும் ஆளுக்கோ வாகனத்திற்கோ இடையூறு அல்லது விபத்து ஏற்படக்கூடிய வண்ணம் எவரேனும் ஆளினால் ஏதேனும் விளம்பர அறிவித்தல் பொருத்தப்படலாகாது. அத்துடன் வாகனத்தைச் செலுத்துகின்ற எவரேனும் சாரதியின் கவனத்தை திசைதிருப்புகின்ற வகையிலோ அல்லது அவரது புலக்காட்சிக்கு தடையேற்படுத்துகின்ற வகையில் மின்சார ஒளிக்கீற்றுகளை பொருத்தவோ உறிஞ்சியொளிரச் செய்வித்தலோ ஆகாது.

9. சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் விண்ணப்பப் பத்திரத்திற்காக இத் துணைவிதிகளின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றை விநியோகிக்க அவசியமான பணிப்புகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளவிடத்து, அது பற்றி தவிசாளரோ அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரோ விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் வேண்டும். விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் கிடைத்த பின்னர் அவரால் இதனகத்துப்பின்னர் 10ஆவது துணைவிதியில் குறிப்பிட்டுள்ளவாறு அனுமதிப்பத்திரக் கட்டணமும் 11ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்ட பிணைப்பணமும் செலுத்தப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பது தவிசாளரின் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் பணியாக அமைதல் வேண்டும்.

10. (அ) இத்துணைவிதிகளின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்தினதும் அடிப்படையில் பிரதேச சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய அனுமதிப் பத்திரக் கட்டணமானது அத்தகைய அனுமதிப்பத்திரத்திற்காக அறவிடப்படுகின்ற கட்டணம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149ஆவது பிரிவின் I ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்தக் கட்டணத்தையும் அதற்கு நேரொத்த II ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள உச்சக் கட்டணத்தையும் விஞ்சாத வகையிலான கட்டணமாக அமைதல் வேண்டுமென்பதோடு, பிரதேச சபையினால் அத்தகைய கட்டணம் வருடந்தோறும் விதிக்கப்படலும் வேண்டும்.

(ஆ) இத்துணைவிதிகளின் கீழ் விநியோகிக்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரமொன்று முன்கூட்டியே செல்லுபடியற்ற தாக்கப்பட்டாலேயொழிய அத்தகைய அனுமதிப்பத்திரம் எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைதல் வேண்டும்.

(இ) ஏதேனும் விளம்பர அறிவித்தலின் காட்சிக்காக விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் காலம் நிறைவடைந்த பின்னர் தொடரும் வருடத்திலும் அத்தகைய விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்த அவசியமாகின்ற வேளையில் அத்தகைய தொடரும் வருடத்திலும் அத்தகைய விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்காக புதிய அனுமதிப்பத்திரமொன்று பெறப்படல் வேண்டும்.

(ஈ) (அ) பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் பிரதேச சபையினால் விதிக்கப்படுகின்ற வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் பற்றிய அறிவித்தலை வர்த்தமானப் பத்திரிகையில் அறிவிக்க வேண்டியது தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

(உ) இத்துணைவிதியில் எது குறிப்பிடப்பட்டிருப்பினும் ஏதேனும் சமயப்பணி அல்லது பண அறவீடு இன்றி நடத்தப்படுகின்ற கலாசாரப்பணி தொடர்பான விளம்பர அறிவித்தல் அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் இருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். ஆயினும், அத்தகைய பிரச்சார அறிவித்தலுக்காக இத்துணைவிதிகளின் ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே ஏற்புடையதாதல் வேண்டும்.

11. (அ) விளம்பர அறிவித்தலொன்றைக் காட்சிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற ஏதேனும் விண்ணப்பப் பத்திரத்திற்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ள வேளையில் பிணைத் தொகை விண்ணப்பதாரியால் பிரதேச சபையில் வைப்புச் செய்யப்படும் வரை தவிசாளரால் அத்தகைய விண்ணப்பப் பத்திரத்திற்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படலாகாது.

(ஆ) ஏதேனும் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை விநியோகிக்க முன்னர் பிரதேச சபையில் வைப்புச் செய்ய வேண்டிய பிணைத் தொகை பற்றி பிரதேச சபையினால் மேற்கொள்ளப் படுகின்ற தீர்மானத்தை வர்த்தமானியில் அறிவிக்க வேண்டியது தவிசாளரது பணியாதல் வேண்டும்.

12. காட்சிப்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு அறிவித்தலுக்காகவும் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்தின் இலக்கம் அந்த அறிவித்தலில் அல்லது அறிவித்தலைக் காட்சிப்படுத்த முன்னர் ஒவ்வோர் அறிவித்தலிலும், வலது பக்க கீழ் மூலையில் குறிப்பிட வேண்டியது அனுமதிப் பத்திரதாரரினது பணியாதலும் வேண்டும்.

13. (அ) ஏதேனும் விளம்பர அறிவித்தலைப் பொருத்துவதற்காக பாவிக்கப்படுகின்ற ஏதேனும் வகையைச் சேர்ந்த காட்சிப் பலகை, தாங்கி, நிர்மாணிப்பு அல்லது பொருத்தி, சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் அல்லது எவரேனும் ஆளுக்கோ அல்லது எவரேனும் ஆளின் ஆதனத்திற்கோ ஆபத்து விளைவிக்கக்கூடிய அல்லது சேதமேற்படுத்தக்கூடிய வகையில் அமைகின்ற வேளையில் அதனைத் திட்டவட்டமான காலப்பகுதிக்குள் இயல்பு நிலைக்கு கொண்டு வருமாறு அனுமதிப்பத்திரதாரருக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற அறிவித்தல் மூலமாக பணிப்புரை விடுக்க தவிசாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின் கீழான அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்ற எவரேனும் ஆள் அத்தகைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் அவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள பணிப்புக்களுக்கு அமைவாக செயலாற்றுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில் தவிசாளராலோ அதிகாரம் பெற்ற உத்தியோகத்தராலோ அத்தகைய விளம்பர அறிவித்தலுக்காக விநியோகித்த அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல் அல்லது அவ்விளம்பர அறிவித்தலைக் கழற்றி அகற்றுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(இ) (ஆ) பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்துள்ள வேளையில் அத்தகைய விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்காக பிரதேச சபையில் வைப்புச் செய்துள்ள பிணைத் தொகை பிரதேச சபைக்குரியதாக அமைதல் வேண்டுமென்பதோடு அப்பிணைத் தொகையைக் கோரி நிற்க எந்த ஆளுக்கும் உரிமை இருத்தலும் ஆகாது.

14. காட்சிக்காக செல்லுபடியான அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்று காட்சிப்படுத்துகின்ற ஏதேனும் அறிவித்தலுக்கு விழைவிக்கப்படுகின்ற சேதம், விகாரப்படுத்துதல் அல்லது அகற்றுதல் சம்பந்தமான செயல்களுக்கு பிரதேச சபை எவ்வகையிலும் வகைப்பொறுப்பிற்கு கட்டுப்படலாகாது.

15. இத் துணைவிதிகளில் ஏதேனும் பணிப்பு மீறப்பட்டுள்ள வேளையில் அத்தகைய மீறல் தொடர்பாக கவனஞ் செலுத்துகின்ற அறிவித்தலுடன் விநியோகிக்கப்பட்ட ஏதேனும் அனுமதிப் பத்திரத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் தவிசாளருக்கோ அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கோ இருத்தல் வேண்டும்.

16. ஏதேனும் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவதற்காக இத்துணைவிதிகளின் கீழ் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் அத்தகைய விளம்பர அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அர்த்தத்தை அல்லது வெளிப்பாட்டினைச் சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்ட சட்டபூர்வமான அனுமதியாகக் கருதப்படலாகாதென்பதோடு அவ்வாறு பொருள் கொள்ளலும் ஆகாது.

17. ஏதேனும் விளம்பர அறிவித்தலை நிர்மாணிக்கும் பொருட்டு பாவிக்கப்பட்ட எவ்விதமான நிர்மாணத் தாங்கியோ, பொருத்தியோ, அதற்காகப் பாவிக்கப்பட்ட வேறு ஏதேனும் பொருள் காரணமாகவோ அத்தகைய விளம்பர அறிவித்தலில் வெளிப்படுத்தப்பட்ட அர்த்தம் அல்லது உணரப்படுகின்ற வேறு அர்த்தம் காரணமாகவோ ஏதேனும் தரப்பினருக்கு நேரிடுகின்ற அல்லது நேரிடக்கூடிய ஏதேனும் நட்டம் அல்லது சேதம் சம்பந்தமாக அனுமதிப்பத்திரதாரர் பொறுப்பு கூறக்கட்டுப்படல் வேண்டும்.

18. இத்துணைவிதிகளின் கீழ் அனுமதிப் பத்திரமொன்றை பெற்றுக்கொள்ள சமர்ப்பித்த விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துகின்ற இறுதித் திகதிக்குப் பின்னர் நாற்பத்தெட்டு மணித்தியாலங்கள் கழிவதற்கு முன்னர் அத்தகைய விளம்பர அறிவித்தலையும் அதற்காக பாவிக்கப்பட்ட வேறு சகலவிதமான பொருட்களின் பாகங்களையும் அந்த இடத்திலிருந்தோ /இடங்களிலிருந்தோ அகற்றச் செய்விக்க வேண்டியது அனுமதிப் பத்திரதாரரது பணியாதல் வேண்டும்.

19. (அ) 18ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயலாற்றியதன் பின்னர் தவிசாளருக்கு எழுத்து மூலமாக விடுக்கப்படுகின்ற கோரிக்கையின் பேரில் சம்பந்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை விநியோகிக்க முன்னர் பிரதேச சபையில் வைப்புச் செய்யப்பட்ட வைப்புத் தொகையை அனுமதிப்பத்திரதாரர் மீளப்பெற இயலும்.

(ஆ) (அ) பந்தியில் குறிப்பிட்டவாறு எழுத்திலான கோரிக்கை கிடைத்த பின்னர் அத்தகைய வைப்புத் தொகையை அனுமதிப் பத்திரதாரருக்கு விடுவிக்க முன்னர்-

(i) 18ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்ட பணிப்புகள் அனுமதிப்பத்திரதாரரால் முறையாக ஈடேற்றப் பட்டுள்ளதா என்பதையும்

(ii) அறிவித்தல் காட்சிக்கு வைக்கப்பட்டது பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்ட காட்சிப் பலகையிலாக அமையுமிடத்து அவ்வறிவித்தலை அகற்றும்போது அல்லது அனுமதிப் பத்திரதாரரால் பொறுப்புக்கூற வேண்டிய ஏதாவது கருமம் காரணமாக அக்காட்சிப் பலகைக்கு ஏதேனும் சேதம் ஏற்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியது தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

(இ) அனுமதிப் பத்திரதாரரால் 18ஆவது துணைவிதியில் குறிப்பிட்டவாறு செயலாற்றியுள்ளமையும் பிரதேச சபையின் காட்சிப்பலகைக்கு சேதம் ஏற்படவில்லையென்பதும் (ஆ) பந்தியில் குறிப்பிட்டவாறு உறுதிப்படுத்திக் கொள்ளப்படுகின்ற வேளையில் தவிசாளர் திருப்தியடைந்தாலேயன்றி அத்தகைய வைப்புத்தொகை அனுமதிப்பத்திரதாரருக்கு முழுமையாக விடுவிக்கப்படலாகாது. எவரேனும் அனுமதிப்பத்திரதாரரால் 17 ஆவது துணைவிதியில் குறிப்பிட்டவாறு செயலாற்றுவதைத் தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில் அல்லது பிரதேச சபையின் காட்சிப் பலகைக்கு சேதம் ஏற்பட்டுள்ளவிடத்து, சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் அப்பணியைப் புரிதல் அல்லது காட்சிப் பலகையைத் திருத்தியமைத்தல் அல்லது அவ்விரு கருமங்களுக்காகவும் பிரதேச சபைக்கு ஏற்க நேரிடுகின்ற செலவினை வைப்புத் தொகையில் இருந்து கழித்துக்கொள்ள வேண்டுமென்பதோடு, எஞ்சிய ஏதேனும் பணத்தொகை இருப்பின் அத்தொகையை மாத்திரம் அனுமதிப் பத்திரதாரருக்கு மீளச் செலுத்துதல் வேண்டும்.

(ஈ) (இ) பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு செயலாற்றும் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தொகை வைப்புச் செய்யப்பட்ட பிணைத்தொகையைப் பார்க்கிலும் விஞ்சியதாக உள்ள சந்தர்ப்பத்தில், அவ்வாறு மேலதிகமாக அறவிடப்பட வேண்டிய பணத்தொகையை அனுமதிப்பத்திரதாரர் பிரதேச சபைக்குச் செலுத்துதல் சட்ட முறையானதாதல் வேண்டும்.

20. பிரதேச சபை பிரதேசத்தில் பேணிவரப்படுகின்ற ஏதேனும் தொழில் நிலையத்தின் அல்லது தொழிற்சாலையின் பெயர், முகவரி மற்றும் அத்தகைய தொழில் நிலையத்தில் மேற்கொள்ளப்படுகின்ற தொழில் முயற்சியின் தன்மை அல்லது தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திகளின் தன்மையைக் காட்டுகின்ற அறிவித்தல் பலகை ஒன்றினை மாத்திரம் அத்தகைய தொழில் நிலையத்தின் அல்லது தொழிற்சாலையின் முன்புறத்தில் காட்சிப்படுத்தல், வீட்டுப் பெயர்ப்பலகைகள் மற்றும் ஏதேனும் ஆதனத்தைக் குத்தகைக்குவிட அல்லது வாடகைக்குக் கொடுக்க அத்தகைய ஆதனத்தின் மீது காட்சிப்படுத்தப்படுகின்ற "குத்தகைக்காக"அல்லது "விற்பனைக்காக"அல்லது "வாடகைக்காக"எனக் குறிப்பிடப்படுகின்ற ஒரு விளம்பர அறிவித்தல் தொடர்பில் மாத்திரம் இத் துணைவிதிகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகாது. ஆயினும், அத்தகைய ஒன்றுக்கு மேற்பட்ட அறிவித்தல் பலகைகள் காட்சிப்படுத்தப்படுகின்ற ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு அதிகரிக்கின்ற ஒவ்வொரு பெயர்ப் பலகைக்கும் இத்துணைவிதிகளின் ஏற்பாடுகள் வலுவுள்ளனவாக அமைதல் வேண்டும்.

21. அரசாங்கம் அல்லது மாகாணசபை அல்லது பிரதேச சபையினால் காட்சிப்படுத்தப்படுகின்ற விளம்பர அறிவித்தல் தொடர்பில் இத் துணைவிதிகள் ஏற்புடையதாதல் ஆகாது.

22. ஏதேனும் தொழில் நிலையத்தின் பெயர், இலக்கம் மற்றும் /அல்லது முகவரியுடன் வேறு ஏதேனும் வர்த்தகப் பண்டத்தின் அல்லது சேவையின் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலும், ஏதேனும் வீட்டின், ஏதேனும் விதத்திலான வர்த்தகப் பண்டத்தின் அல்லது சேவையின் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலும், அவ்விளம்பர அறிவித்தல் அல்லது விளம்பர அறிவித்தல்கள் இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கு கட்டுப்படல் வேண்டும். இத்துணைவிதியின் ஏற்பாடுகள் சம்பந்தமாக அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய ஆளாக அத்தகைய தொழில் நிலையத்தின் அல்லது வீட்டின் உரிமையாளர், முகாமையாளர் அல்லது அவ்வேளையில் அதன் நிருவாகத்திற்கும் பொறுப்பாக உள்ள எவரேனும் ஆள் கருதப்படல் வேண்டும்.

23. ஏதேனும் விதத்திலான விளம்பர அறிவித்தல் பொது இடத்தில் உள்ள அல்லது அத்தகைய இடத்தை அண்டியுள்ள மரமொன்றில், மரத்தண்டில், கிளையில் அல்லது வேறு ஏதேனும் பகுதியில் அல்லது பொதுக் கட்டிடமொன்றுடன் இணைக்கப்பட்டு பொருத்துதல், ஒட்டுதல், தொங்கவிடல், கட்டிவைத்தல் அல்லது விளம்பரக் காட்சிப்படுத்தல் எவராலும் மேற்கொள்ளப்படலாகாது.

24. இத்துணைவிதிகளின் ஏதேனும் பகுதியொன்றிலான ஏற்பாடுகளின் கீழ் தவிசாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஏதேனும் கருமம் அல்லது பணி, அவரால் பிரதேச சபையின் உத்தியோகத்தர் எவருக்கேனும் எழுத்துமூலம் பணிக்கப்படுகின்ற பணிப்புகளுக்கு கட்டுப்பட்டதாக ஒப்படைக்கப்பட முடியுமென்பதோடு அவ்வாறான அதிகாரம் பெற்ற ஆளொருவரினால் அத்தகைய சாட்டுதல் கடிதத்தில் பணிக்கப்பட்டுள்ள பணிப்புக்களுக்கு கட்டுப்பட்ட வகையில் செயற்படுதல் சட்டமுறையானதாக அமைவதோடு அத்தகைய கருமம் அல்லது பணி இந்த அங்கீகாரம் பெற்ற துணைவிதிகள் மூலமாக தவிசாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் அவரால் புரியப்பட்ட கருமம் அல்லது பணியாகக் கருதப்படுதலும் வேண்டும்.

25. இத்துணைவிதிகளின் ஏதேனும் பகுதியொன்றிலான பணிப்பு அல்லது பணிப்புக்களின் கீழ் அனுமதிப்பத்திரம்பெற்ற இடமொன்றைப் பரிசோதனை செய்ய தவிசாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டுமென்பதோடு எவரேனும் அனுமதிப்பத்திரதாரரால் பரிசோதனை செய்ய அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அனுமதிப்பத்திரதாரரின் கருமமாக அமைதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஏதேனும் பரிசோதித்தலைத் தடுக்கவோ தடையேற்படுத்தவோ கூடாது.

26. இத்துணைவிதிகளின் கீழ் சபையினாலோ அல்லது தவிசாளராலோ அல்லது ஏதேனும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தராலோ எவரேனும் ஆளுக்கு விடுக்கப்பட்ட அறிவித்தலொன்று,-

(அ) அத்தகைய அறிவித்தல் கிடைக்க வேண்டியவருக்கு தபாலில் அனுப்பிவைக்கப்படுவதற்காக உறுதிசெய்யப்பட்டதென்பதை நிரூபிக்கக்கூடிய வகையில் தபாலுக்காக ஒப்படைக்கப்பட்டால் ; அல்லது

(ஆ) அவரிடம் அல்லது அவரது முகவரியில் அப்போதைக்கு குடியமர்ந்துள்ள எவரேனும் ஆளிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பின் ; அல்லது

(இ) அவர் குடியமர்ந்துள்ள இடத்தில் அல்லது அவரால் தனது பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற இடத்தில் எந்தவோர் இடத்திலும் ஒட்டப்பட்டிருப்பின் அத்தகைய அறிவித்தல் முறையாக ஒப்படைக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டுமென்பதோடு அது எவ்விதத்திலேனும் ஒப்படைக்கப்படுவது சட்டமுறையானதாக அமைதலும் வேண்டும்.

27. இத்துணைவிதிகளின் ஏதேனும் ஏற்பாடு ஒன்றையோ அல்லது பலவற்றையோ பிரதேச சபைப் பிரதேசத்தினுள் எவரேனும் நபர் மீறுவது 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 122(2) இன் ஏற்பாடுகளுக்கமைவாக நியாயாதிக்கமுள்ள நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டதன் பேரில்:-

(i) அந்நபர் குற்றவாளியாகக் காணப்பட்ட தவறொன்றுக்காக ரூபா 750.00 அபராத விதிப்பு செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன்,

(ii) அந்நபரால் குறித்த குற்றம் தொடர்ச்சியாகப் புரியப்படுகின்ற அத்தகைய சந்தர்ப்பத்தில் தொடரப்படுகின்ற நாள் ஒன்றுக்கு ரூபா 250.00 அபராத விதிப்பும் செலுத்தப்படுதல் வேண்டும்.

28. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் தேவைப்பட்டாலேயொழிய, இத்துணைவிதிகளில் -

'**பிரதேச சபைப் பிரதேசம்**' என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபை அமைந்துள்ள நியாயாதிக்க பிரதேசத்தையும் ;
'**பிரதேச சபை**' என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபையையும் ;

'**அனுமதிப்பத்திரதாரர்**' என்பது, இத்துணைவிதிகளிலான பணிப்புக்களின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள எவரேனும் ஆள் எனக் கருதப்படுவதோடு மேற்படி அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் பொறுப்பாளியோ, முகாமையாளரோ அப்போதைக்கு அவ்விடத்தின் பணிகளை நிர்வகிக்க பொறுப்பாகவுள்ள எவரேனும் ஆளையும் ;

'**அனுமதிப்பத்திரம் பெற்ற இடம்**' என்பது, இத்துணைவிதிகளிலான பணிப்புக்களின் கீழ் எந்த இடத்தைப் பாவிக்க அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோ, அந்த இடத்தையும் ;

'**அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்**' என்பது, அக்கருமத்திற்காக தவிசாளரால் ஆவணமொன்றினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பிரதேச சபையின் எவரேனும் உத்தியோகத்தரையும் ;

'**செயலாளர்**' என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபையின் செயலாளரையோ அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கருமங்கள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தரையும் ;

'**தவிசாளர்**' என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபையின் தவிசாளரையும்

குறிக்கும்

'**கட்அவுட்**' என்பது, பலகை அல்லது வேறு ஏதேனும் மூலப் பொருளைப் பாவித்து தயாரிக்கப்பட்ட ஏதேனும் சட்டகத்தில் ஒட்டப்பட்ட அல்லது பொருத்தப்பட்ட விளம்பர அறிவித்தல்களையும்,

'**காட்சிப் பலகை**' என்பது, மக்கள் அறிந்து கொள்வதற்காகவோ கவனத்திற்காகவோ, காட்சிப்படுத்தப்படுகின்ற ஏதேனும் விளம்பர அறிவித்தல்களைப் பொருத்துவதற்காக அல்லது தாங்கி வைப்பதற்காக நிர்மாணிக்கப்படுகின்ற ஏதேனும் வகையிலான நிரந்தரமான பலகை அல்லது அத்தகைய நிர்மாணத்தையும்,

'**விளம்பர அறிவித்தல்**' என்பது, எவரேனும் ஆளினால் ஏதேனும் காணியிலோ, கட்டிடத்திலோ நிர்மாணிப்பிற்கு மேலாக அல்லது அதன் மீது முழுமையாகவோ பகுதியளவிலோ காட்சிப்படுத்தப்படுகின்றதும் மக்களின் அறிந்துகொள்ளல் அல்லது கவனத்தின் பொருட்டு காட்சிப்படுத்துகின்ற, ஒட்டுகின்ற, பொருத்துகின்ற, நிர்மாணிக்கின்ற, தொங்கவிடப்படுகின்ற அல்லது வேறு விதமாக இடஅமைவு செய்யப்படுகின்ற பிரச்சாரக் கருமத்திற்காக பாவிக்கப்படுகின்ற ஏதேனும் எழுத்து, சொல் அல்லது உருவப்படக் குறிப்பினை உள்ளடக்குகின்ற விளம்பர அறிவித்தல், பெனர் அல்லது கட்அவுட் அல்லது வேறுவிதமான மாதிரியுரு, விளம்பரத்தாள் அறிவித்தல், வர்த்தக அறிவித்தலையும்

உள்ளடக்கும்.

## முதலாவது அட்டவணை

04 வது துணைவிதி

### ................. பிரதேச சபை எல்லைக்குள் விளம்பர அறிவித்தல்களை காட்சிப்படுத்துவதற்கான அனுமதிப் பத்திரம்

செலுத்திய அனுமதிப் பத்திர கட்டணம் : ரூ. ......................................
அனுமதிப் பத்திரத்தின் தொடர் இலக்கம் : ......................................
பிணைத் தொகை : ரூ. ................................

............................................................... இல் வசிக்கும். ...................................இலக்கம் கொண்டதேசிய அடையாள அட்டை உரிமையாளரான ..................................... என்பவருக்கு விளம்பர அறிவித்தல்களை ஒழுங்குறுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகளின் பணிப்புக்களுக்கு கட்டுப்பட்டதாக 20.................ஆண்டு ................. மாதம் ................ திகதியில் இருந்து 20.......... ஆண்டு............. மாதம் ............... திகதி வரையான காலப்பகுதிக்குள்..................................... பிரதேச சபை எல்லைக்குள் கீழே குறிப்பிட்டுள்ள இடத்தில் /இடங்களில் விளம்பர அறிவித்தலை /அறிவித்தல்களை காட்சிப்படுத்த இத்தால் அதிகாரம் அளிக்கப்படுகின்றது.

**விளம்பர அறிவித்தல் /அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப்பட அதிகாரமளிக்கப்பட்டுள்ள இடம் /இடங்கள்**

01. ..........................................................................................................
02. ..........................................................................................................
03. ..........................................................................................................
04. ..........................................................................................................

தலைவர் /அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்,
.............................. பிரதேச சபை.

திகதி:- .....................................................

**இரண்டாவது அட்டவணை**

06 வது துணைவிதி

***விளம்பர அறிவித்தலைக் காட்சிக்கு வைப்பதற்கான விண்ணப்பப்படிவம்***

01. விண்ணப்பதாரியின் பெயர்:- ..................................................................................

02. முகவரி:-.......................................................................................................................

03. தேசிய அடையாள அட்டை இல.:- ...........................................................

04. தொலைபேசி இலக்கம்:- ...........................................................

05. விளம்பர அறிவித்தல் பற்றிய விபரங்கள்-

i. அறிவித்தலின் அளவு: நீளம் .............. செ.மீ. அகலம்: ................ செ.மீ

ii. அறிவித்தல்களின் எண்ணிக்கை : .....................................................

iii. அறிவித்தலின் உள்ளடக்கம்: ...........................................................

iv. இடஅமைவு செய்யும் விதம்: ...........................................................

v. இடவமைவு செய்யும் இடங்கள்: ........................................................
(7 வது துணைவிதியின் (ஊ) பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரியொன்றை இணைக்கவும்)

06. கோருகின்ற அனுமதிப் பத்திரம் செல்லுபடியாக வேண்டிய கால எல்லை:

தொடக்கத் திகதி: 20..............................................மாதம் ................. ஆம் திகதி

இறுதித் திகதி: 20......................................... மாதம் ................... ஆம் திகதி

விளம்பர அறிவித்தல்களை ஒழுங்குறுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதியின் அனைத்துவிதமான பணிப்புக்களையும் கடைப்பிடிப்பேன் எனவும், அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் நிறைவடைந்து இரண்டு நாட்கள் கழிய முன்னர் அனுமதிப் பத்திரத்துடன் தொடர்புடைய விளம்பர அறிவித்தல்/ அறிவித்தல்களையும் அதில் இடப்பட்டுள்ள பொருட்கள் அனைத்தையும் எனது செலவில் அவ்விடத்தில் இருந்து/ இடங்களில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன் எனவும் இத்தால் உறுதியளிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி:- ................................

*1-909/1*

---

**கிழக்கு மாகாண மாகாண சபை**

துணைவிதிகள்

**மண்முனை மேற்கு பிரதேச சபை**

*1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவு (1) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1989ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள்) சட்டத்தின் பிரிவு 2 இனால் கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சராகிய நஸீர் அகமட் ஆகிய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைவாக, 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 126 விடயம் (IX) (ஏ) மற்றும்*

(XV) இன் கீழ் **மண்முனை மேற்கு** பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்டுள்ள வெதுப்பகங்களை ஒழுங்குபடுத்தல் மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான கருமங்களுக்கான துணைவிதிகள் என்னால் அங்கீகரிக்கப்பட்டமையை பகிரங்கப்படுத்த இத்தால் கட்டளையிடுகின்றேன்.

நஸீர் அகமட்,
கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும்
உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்.

கிழக்கு மாகாண முதலமைச்சுச் செயலகம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை,
2015, நவெம்பர் 06.

**வெதுப்பகங்கள் ஒழுங்குபடுத்துவதற்கான துணைவிதிகள்**

இத்துணைவிதிகள் இதனகத்துப்பின்னர் பிரதேச சபை எனக் குறிக்கப்படும் **மண்முனை மேற்கு** பிரதேசசபை அதிகாரப் பிரதேசத்தினுள் செயற்படும் வெதுப்பகங்களை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான கருமங்களுக்கான துணைவிதிகள் என எடுத்துக்காட்டப்படும்.

2. இத்துணைவிதிகளின் நோக்கத்துக்காக தவிசாளரினால் இதனகத்துப்பின்னர் விபரிக்கப்படுகின்றவாறு வழங்கப்படுகின்ற செல்லுபடியாகும் ஒரு அனுமதிப்பத்திரமின்றி எந்தவோர் நபரினாலும் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் வெதுப்பகமொன்றினை கொண்டு நடாத்துதல் ஆகாது.

3. இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டிருந்தாலன்றி அது வழங்கப்பட்டிருக்கின்ற ஆண்டின் திசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரை செல்லுபடியானதாக இருக்கும்.

4. இத்துணைவிதிகள் வலுவிற்கிடப்படுகின்ற தினத்திற்கு முன்னரான காலப்பகுதியில் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் செயற்பாட்டில் இருக்கின்ற வெதுப்பகங்களுக்கு துணைவிதிகள் 2 இன் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகாது என்பதுடன் அத்தகைய வெதுப்பகங்கள் இதனகத்துப்பின்னரான ஏற்பாடுகளுக்கமைவாக அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய காலப்பகுதிக்குள் அத்தகைய நபர்கள் வெதுப்பகமொன்றைக் கொண்டு நடாத்துதல் இத்துணைவிதிகளின்கீழ் சட்டமுறையானதாதலும் வேண்டும்.

5. பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானித்து அறவிடப்படுகின்ற கட்டணமொன்றினைச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்படுகின்ற அனுமதிப்பத்திரமொன்றின் ஊடாக எவரேனும் நபர் பிரதேசசபைப் பிரதேசத்தினுள் ஏதேனும் வெதுப்பகம் ஒன்றைக் கொண்டு நடாத்த அனுமதிப்பத்திரமொன்றிற்கு விண்ணப்பிக்கலாம்.

6. ஏதேனும் நியாயமான காரணங்கள் இருந்தாலன்றி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற தினத்திலிருந்து பதினான்கு வேலை நாட்களுக்குள் அத்தகைய நபருக்கு அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவது பிரதேச சபையின் கடமையாதல் வேண்டும்

7. இத்துணைவிதிகளின் கீழ் பிரதேச சபையினாலோ அல்லது தவிசாளராலோ அல்லது எவரேனும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தராலோ எவரேனும் ஆளுக்கு விடுக்கப்பட்ட அறிவித்தலொன்று,-

(அ) அத்தகைய அறிவித்தல் கிடைக்க வேண்டியவருக்கு தபாலில் அனுப்பிவைக்கப்படுவதற்காக உறுதிசெய்யப்பட்டதென்பதை நிரூபிக்கக்கூடிய வகையில் தபாலுக்காக ஒப்படைக்கப்பட்டால் ; அல்லது

(ஆ) அவரிடம் அல்லது அவரது முகவரியில் அப்போதைக்கு குடியமர்ந்துள்ள எவரேனும் ஆளிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பின் ; அல்லது

(இ) அவர் குடியமர்ந்துள்ள இடத்தில் அல்லது அவரால் தனது பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற இடத்தில் எந்தவோர் இடத்திலும் ஒட்டப்பட்டிருப்பின் அத்தகைய அறிவித்தல் முறையாக ஒப்படைக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டுமென்பதோடு அது எவ்விதத்திலேனும் ஒப்படைக்கப்படுவது சட்டமுறையானதாக அமைதலும் வேண்டும்.

8. இத்துணைவிதிகளின் ஏதேனும் பகுதியொன்றிலான ஏற்பாடுகளின் கீழ் தவிசாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஏதேனும் கருமம் அல்லது பணி, அவரால் பிரதேச சபையின் உத்தியோகத்தர் எவருக்கேனும் எழுத்துமூலம் பணிக்கப்படுகின்ற பணிப்புகளுக்கு கட்டுப்பட்டதாக ஒப்படைக்கப்பட முடியுமென்பதோடு அவ்வாறான அதிகாரம் பெற்ற ஆளொருவரினால் அத்தகைய சாட்டுதல் கடிதத்தில் பணிக்கப்பட்டுள்ள பணிப்புக்களுக்கு கட்டுப்பட்ட வகையில் செயற்படுதல் சட்டமுறையானதாக அமைவதோடு அத்தகைய கருமம் அல்லது பணி இத்துணைவிதிகள் மூலமாக தவிசாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் அவரால் புரியப்பட்ட கருமம் அல்லது பணியாகக் கருதப்படுதலும் வேண்டும்.

9. இத்துணைவிதிகளின் ஏதேனும் பகுதியொன்றிலான பணிப்பு அல்லது பணிப்புக்களின் கீழ் அனுமதிப்பத்திரம்பெற்ற இடமொன்றைப் பரிசோதனை செய்ய தவிசாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டுமென்பதோடு எவரேனும் அனுமதிப்பத்திரதாரரால் பரிசோதனை செய்ய அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அனுமதிப்பத்திரதாரரின் கருமமாக அமைதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஏதேனும் பரிசோதித்தலைத் தடுக்கவோ தடையேற்படுத்தவோ கூடாது.

10. இத்துணைவிதியில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, எந்தவொரு வெதுப்பகத்திற்கும் தவிசாளரால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.

(அ) வெதுப்பகத்தில் தயாரிக்கப்படும் உணவு வகைகளுக்கு வெப்பத்தைப் பெற்றுக்கொள்ளும் எதுவாகவிருந்தாலும் இப்பிரிவில் காட்டப்பட்டுள்ள பிரமாணங்களைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(i) வெதுப்பகம் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் இருத்தல் வேண்டும்.

(ii) வெதுப்பகத்தின் அனைத்து அறைகளுக்கும் வெளியில் திறந்துவைக்கக்கூடிய ஜன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், திறந்திருக்கும் ஜன்னலின் பரப்பளவு அறையின் பரப்பளவின் பதினைந்திலொன்றுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும்.

(iii) அனைத்து அறைகளும் உட்கூரை நிர்மானிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், வெள்ளை நிற வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தலும் வேண்டும்.

(iv) அனைத்து அறைகளினதும் தரை சீமெந்திட்டு மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடு பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(v) வெதுப்பகத்தின் சூளை அமைந்திருக்கும் அறை நில மட்டத்திலிருந்து உட்கூரை வரை ஆகக்குறைந்தது 3 மீற்றர் உயரம் இருத்தல் வேண்டுமென்பதுடன், செங்கல் அல்லது சீமெந்துக் கல் அல்லது கபூக் கல்லினால் நிர்மானித்து இருபக்கங்களும் சாந்து பூசப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) வெதுப்பகத்தின் சூளை அமைந்திருக்கும் அறை தவிர்ந்த ஏனைய எல்லா அறைகளும் நில மட்டத்திலிருந்து உட்கூரை மட்டம் வரை ஆகக் குறைந்தது 2.75 மீற்றர் உயரம் இருத்தல் வேண்டுமென்பதுடன், செங்கல் அல்லது சீமெந்துக்கல் அல்லது கபுக்கல் அல்லது அலுமீனியம் மற்றும் வெட்டுமரத்தினால் நிர்மானித்து இருபக்கங்களும் சாந்து பூசப்பட்டு வர்ண மை பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(vii) வெதுப்பகத்தினுள் வெட்டுமரம் கொண்டு பொருத்தப்பட்ட பாகங்களுக்கு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) கூரை திடமான பொருட்களை உபயோகித்து வேயப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, கூரையின் ஓரம் நில மட்டத்திலிருந்து குறைந்த பட்சம் 1.8 மீற்றர் உயரத்தில் இருப்பதுடன், தாழ்வாரம் ஆகக்குறைந்தது ஒரு மீற்றராகவும் இருத்தல் வேண்டும்.

(ix) தயாரிப்புச் செயற்பாடுகளின் பொருட்டு குடிப்பதற்குகந்த நீரை பாவிப்பதற்கான ஏற்பாடுகளை செய்திருத்தல் வேண்டும்.

(x) தயாரிப்புச் செயற்பாடுகளின் பொருட்டு நீரைப் பாவிக்கும் அனைத்து அறைகளுக்கும் பாதுகாப்பான நீர் வழங்கல் குழாய் மூலம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, வெளியேற்றப்படும் கழிவு நீர் பாய்ந்தோடுவதற்கு போதியளவு வடிகான் முறை தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(xi) வெளியேற்றப்படும் கழிவு நீரை உறிஞ்சியிழுக்கக்கூடிய கிடங்கிற்கு பாய்ந்தோடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(xii) கீழே விபரிக்கப்படும் 17ஆவது துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ளவாறு கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தும் நடைமுறைகளைச் செய்திருத்தல் வேண்டும்.

(ஆ) அனுமதிப்பத்திரத்தைக் கோரும் வெதுப்பகம் விறகை உபயோகிக்கும் வெதுப்பகம் ஆயின்,

(i) வெதுப்பகத்தின் சூளையில் அமையும் புகைபோக்கியின் மேல் விளிம்பு குறைந்த பட்சம் நில மட்டத்திலிருந்து 7.5 மீற்றர் உயரத்தைக் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

(ii) மாவைப் பிசையும் எல்லா மேசைகளினதும் மேற்புறம் சிதைவுகள் இன்றி செம்மையாக இருத்தல் வேண்டுமென்பதுடன், பலகை இணைப்புக்களுக்கு இடையில் இடைவெளியின்றி, பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். இன்றேல் துருப்பிடிக்காத உலோகத்தகட்டினால் இடைவெளிகள் இன்றி மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) வெதுப்பகத்திலிருந்து வெளியாகும் எரிந்த சாம்பல் மற்றும் எஞ்சிய விறகுத் துண்டுகளை அகற்றுவதற்கு போதுமானளவு அங்கும் இங்கும் கொண்டு செல்லக்கூடிய பாத்திரமொன்று இருத்தல் வேண்டும்.

(iv) வெதுப்பக சூளையின் வெளிப்புறம் வர்ணப்பூச்சு பூசப்பட்டோ அல்லது சுண்ணாம்புப் பூச்சு பூசப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(v) சாதாரண தீ அணைக்கும் கருவிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் வெதுப்பகத்திற்கு மின்சாரத் தொடர்பைப் பெற்றிருப்பின் மேலதிகமாக மின்சார தீ அணைப்பு கருவிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) அனுமதிப்பத்திரத்தைக் கோரும் வெதுப்பகம் மின்சாரத்தினால் இயங்கும் வெதுப்பகம் ஆயின்

(i) வெதுப்பக உபகரணங்களுக்கு மின்சார இணைப்பைப் பெற்றுக் கொடுக்கின்ற மின் இணைப்பிகள் (பிளக்) பாதுகாப்பான நிலையில் காணப்பட வேண்டுமென்பதுடன், உயர் வோல்ட் மற்றும் மின்சார கசிவுகளின் போது சுயமாக சீர்செய்கின்ற தன்னியக்க உபகரணங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) வெதுப்பக வளவில் பொருத்தப்பட்டுள்ள மின் கம்பிகள் மற்றும் மின் சுற்றுக்களின் திறந்த ஓரப்பகுதிகள் கொன்டியுட் குழாய்களால் மூடப்பட்டு அல்லது பெட்டிகளின் மூலம் மூடப்பட்டு மின்சார கசிவுகள் ஏற்படாதவாறு பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) சாதாரண தீ அணைக்கும் கருவிகள் மற்றும் மின்சார அணைப்புக்கருவிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென இத்துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ள அனைத்து பாகங்களுக்கும் ஆகக் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவை வீதம் வர்ணப்பூச்சு பூசப்படுதல் வேண்டும்.

12. மா பிசைதலுக்காக உபயோகிக்கப்படும் அனைத்து அறைகளின் தரையை, தினந்தோறும் குறைந்த பட்சம் ஒரு தடவையேனும் கழுவுவதற்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

13. வெதுப்பகம் மற்றும் அதன் சுற்றாடலில், வடிகான்கள், மரத்தளபாடங்கள் மற்றும் கருவிகள் சுத்தமாகவும் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்டும் வைத்திருத்தல் வேண்டும்.

14. வெதுப்பக தயாரிப்புகளுக்காக உபயோகிக்கும் மா மற்றும் ஏனைய பொருட்களின் காலாவதியாகும் திகதி போதியளவு எதிர்காலத்தைக் கொண்டிருந்தாலேயன்றி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப்பொருட்கள் வெதுப்பக தயாரிப்பு நடவடிக்கைகளுக்காக உபயோகிக்கப்படல் ஆகாது.

15. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணி புரிவதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய

நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் ஏதேனும் கருமங்களில் அல்லது அத்தகைய கருமங்களில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவி சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட இடத்தில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

(இ) அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட இடத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் குறைந்தது வருடத்திற்கு ஒருதடவை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப்பத்திரதாரரின் கடமையாகும்.

16. வெதுப்பகத்தில் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் பாதுகாப்பான முகக்கவசம், கைக்கவசம் மற்றும் தேவைப்படும் வேறு பாதுகாப்பு அணிகள் வழங்கப்படுதலும், அவ்வூழியர் வெதுப்பகப் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு அணிகள் அணிந்திருப்பதையும் பேக்கரிக் கடமைகளை மேற்கொள்ளும் முன்னர் உடலை நன்றாகக் கழுவிச் சுத்தமாக வைத்திருப்பதையும் உறுதி செய்து கொள்ளலும் அனுமதிப் பத்திரதாரரின் பொறுப்பாகும்.

17. (அ) அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்குட்படுத்தப்படக்கூடியதாக இருந்தாலன்றி, அக்கழிவுப் பொருட்கள் -

(i) உயிர் சிதைவுக் கழிவுப் பொருட்கள் ;
(ii) கண்ணாடிப் பொருட்கள் ;
(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;
(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள் ;
(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள் ;
(vi) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள் ;
(vii) ஊறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்

என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களை இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல் அனுமதிப் பத்திரதாரரின் பொறுப்பாகும்.

(ஆ) மேலே (அ) பிரிவில் கூறியவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள், பிரதேச சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்தப்பட்டாலன்றி தலைவரால் கட்டளையிடப்பட்டவாறு அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேண்டும்.

18. வெதுப்பக தயாரிப்புகளுக்காக மனித உபயோகத்திற்குப் பொருந்தாத நீரை உபயோகித்தல் ஆகாது.

19. வெதுப்பக பாவனைக்காக மா மற்றும் வேறு பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்கு, அதற்கென்றே ஒதுக்கப்பட்ட அறையொன்றை உபயோகித்தல் வேண்டுமென்பதோடு, அந்த அறை காற்றோட்டமுள்ளதும் இலையான்கள் அல்லது பிற பூச்சிகள், வண்டுகள் மற்றும் எலிகள் புகாதவாறு பாதுகாப்புடன் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

20. 19 ஆவது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள களஞ்சிய அறையில் மாவைக் களஞ்சியப்படுத்துகையில், ஆகக் குறைந்தது நிலமட்டத்திலிருந்து 20 சென்றி மீற்றர் உயரமுடைய கால்களைக் கொண்ட பலகைத்தட்டொன்றை உபயோகித்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய பலகைத்தட்டு வெறுமையானதும் அங்கும் இங்கும் எடுத்துச் செல்லக்கூடியவாறு முழுநிறைவு செய்யப்பட்டிருத்தலும் வேண்டும். அதேபோன்று அந்த பலகைத் தட்டுகளின் அடியில் எலிகளுக்கோ அல்லது வேறேதேனும் பூச்சிகளுக்கோ தரித்திருக்க முடியாதவாறு மூடப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, குறைந்த பட்சம் சுவரிலிருந்து 23 சென்றி மீற்றர் தூரத்தில் இருத்தலும் வேண்டும்.

21. 20ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பலகைத்தட்டு ஆகக் குறைந்தது மாதத்திற்கு இரண்டு தடவை என்ற அடிப்படையில் அறையிலிருந்து வெளியே எடுத்து சுத்தப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் அனுமதிப்பத்திரதாரரின் பணியாகும்.

*22.* இத்துணைவிதிகளுக்கமைய அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட எந்தவொரு இடத்திலும், எந்தவோர் ஆளும் நித்திரை செய்தல் ஆகாதென்பதோடு, வெதுப்பகச் செயற்பாடுகளுக்காக உபயோகிக்கப்படும் உபகரணங்கள் அல்லது பொருட்கள் தவிர்ந்த வேறு எந்தவிதமான பொருட்களையும் வைத்தல் அல்லது களஞ்சியப்படுத்துதல் ஆகாது. எனினும், வெதுப்பகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேறாக ஒதுக்கப்பட்டுள்ள ஓய்வெடுக்கும் அறை அல்லது சாப்பாட்டறை இந்நிபந்தனைக்கு உள்ளடங்காது.

*23.* வெதுப்பகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் பொருட்டு குறைந்தது பத்துப்பேருக்கு ஒன்றென்ற வகையில் மலசலகூடங்கள் இருத்தல் வேண்டுமென்பதுடன், பெண்கள் மற்றும் ஆண்களுக்கென வெவ்வேறாக மலசலகூடங்கள் இருத்தல் வேண்டும், அத்துடன் மலசலகூடங்கள் வெதுப்பக அறைகளிலிருந்து குறைந்தது 15 மீற்றர் தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

*24.* வெதுப்பக செயற்பாடுகளுக்காக பாவிக்கப்படும் நீர், நிலத்துக்கடியிலுள்ள நீர்த் தொட்டியில் களஞ்சியப்படுத்துவதாயின் அவ்விடத்திலிலுந்து 18 மீற்றருக்குக் குறைந்த தூரத்தில் குப்பைக் கிடங்கு, பசளைக் கிடங்கு அல்லது சாம்பல் கிடங்கு இருத்தல் ஆகாது.

*25.* வெதுப்பகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் சுத்தமான நீர், சுத்தமான துவாய், நகங்களைச் சுத்தப்படுத்தும் தூரிகைகள் மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் போன்றவை வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*26.* எந்தவோர் ஆளும் வெதுப்பகத்தினுள் புகை பிடித்தல் அல்லது வெற்றிலை சப்புதல் அல்லது வேறு ஏதேனும் சுகாதாரக்கேடு விளைவிக்கக்கூடிய பொருளைச் சப்புதல் ஆகாது.

*27.* இத்துணைவிதிக்கமைய அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள எல்லா இடங்களிலும் நன்றாகப் பார்வைக்குத் தெரியக்கூடிய இடத்தில் அங்கீகரிக்கப்பட்ட தராசுப்படிகளைக் கொண்ட தராசு அல்லது வேறு ஏதேனும் வகையான அங்கீகரிக்கப்பட்ட தராசினை வைத்தல் வேண்டும் என்பதுடன், எவரேனும் ஒரு வாடிக்கையாளரினால் கோரப்படும் போது விற்பனைக்கு அல்லது விற்பனைக்காக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள எந்தவொரு வெதுப்பகத் தயாரிப்பினதும் நிறையை அளந்து பார்ப்பதற்கு அல்லது நிறையை அளந்து காட்டுவதற்கு ஏற்றவாறான ஏற்பாடுகளைச் செய்தல் அனுமதிப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

*28.* எந்தவொரு வெதுப்பகத்திலும் தயாரிக்கப்படும் தயாரிப்புகளை அனுமதிப்பத்திரதாரரால் எடுத்துச் செல்லப்படுவதாயின் தூசி அல்லது வேறு கழிவுப் பொருட்கள் அல்லது நீர் உட்புக முடியாதவாறு தயாரிக்கப்பட்ட பெட்டிகளை உபயோகித்தல் அனுமதிப் பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

*29.* இத்துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசோதிப்பதற்கு தவிசாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக வெதுப்பகத்தில் தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

*30.* தவிசாளர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் வெதுப்பகத்தில் தயாரிக்கப்படும் அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள ஏதேனும் மாதிரியொன்றை, அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாகும் என்பதோடு, எந்தவோர் அனுமதிப்பத்திரதாரரும் அத்தகைய கொள்வனவினை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

*31.* இத்துணைவிதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் வெதுப்பகம் கொண்டுநடாத்தப்படும் இடம் 10ஆவது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய செயற்படாதுவிடின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளின் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்படும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரதாரருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை தவிசாளர் அந்த அனுமதிப்பத்திரதாரருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

*32.* 31 ஆவது துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரதாரரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும்.

*33.* அறிவித்தல் ஒன்றைப் பெற்றுக்கொண்ட அத்தகைய நபர் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கு தவிசாளருக்கு தத்துவம் இருத்தல் வேண்டும் என்பதுடன் தவிசாளரால் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதினான்கு நாட்களை விஞ்சாததாகவும் இருத்தல் வேண்டும்.

*34.* 32ஆவது அல்லது 33ஆவது துணைவிதிகளில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரதாரருக்கு அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர்

அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவற்றை அவ்வாறே செயற்படுத்துவதற்கு தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை தவிசாளர் இரத்துச்செய்வது சட்டமுறையானதாதல் வேண்டும்.

35. இத்துணைவிதிகளின் ஏதேனும் ஏற்பாடு ஒன்றையோ அல்லது பலவற்றையோ பிரதேச சபைப் பிரதேசத்தினுள் எவரேனும் நபர் மீறுவது 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 122(2) இன் ஏற்பாடுகளுக்கமைவாக நியாயாதிக்கமுள்ள நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டதன் பேரில்:-

(i) அந்நபர் குற்றவாளியாகக் காணப்பட்ட தவறொன்றுக்காக ரூபா 750.00 அபராத விதிப்பு செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன்,

(ii) அந்நபரால் குறித்த குற்றம் தொடர்ச்சியாகப் புரியப்படுகின்ற அத்தகைய சந்தரப்பத்தில் தொடரப்படுகின்ற நாள் ஒன்றுக்கு ரூபா 250.00 அபராத விதிப்பும் செலுத்தப்படுதல் வேண்டும்.

36. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இத்துணைவிதிகளில் -

**'பிரதேச சபைப் பிரதேசம்'** என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபை அமைந்துள்ள நியாயாதிக்க பிரதேசத்தையும் ;

**'பிரதேச சபை'** என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபையையும் ;

**'அனுமதிப்பத்திரதாரர்'** என்பது, இத்துணைவிதிகளிலான பணிப்புக்களின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள எவரேனும் ஆள் எனக் கருதப்படுவதோடு மேற்படி அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் பொறுப்பாளியோ, முகாமையாளரோ அப்போதைக்கு அவ்விடத்தின் பணிகளை நிர்வகிக்க பொறுப்பாகவுள்ள எவரேனும் ஆளையும் ;

**'அனுமதிப்பத்திரம் பெற்ற இடம்'** என்பது, இத்துணைவிதிகளிலான பணிப்புக்களின் கீழ் எந்த இடத்தைப் பாவிக்க அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோ, அந்த இடத்தையும் ;

**'அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்'** என்பது, அக்கருமத்திற்காக தவிசாளரால் ஆவணமொன்றினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பிரதேச சபையின் எவரேனும் உத்தியோகத்தரையும் ;

**'செயலாளர்'** என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபையின் செயலாளரையோ அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கருமங்கள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தரையும் ;

**'தவிசாளர்'** என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபையின் தவிசாளரையும்
குறிக்கும்.

**'வெதுப்பகத் தயாரிப்புகள்'** என்பது, விற்பனைக்காக அல்லது வேறு ஆளொருவரின் வேண்டுகோளின் மீது தயாரிக்கப்படும் பாண், கேக், பணிஸ், விஸ்கோத்து அல்லது எந்தவொரு இனிப்புப் பண்டமும் ;

**'வெதுப்பகம்'** என்பது, விற்பனைக்காக அல்லது வேறு ஆளொருவரின் வேண்டுகோளின் மீது தயாரிக்கப்படும் பாண், கேக், பணிஸ், விஸ்கோத்து அல்லது எந்தவொரு இனிப்புப் பண்டத்தையும் தயாரிக்கும் இடம் எனக் கருதுவதோடு, அவ்வாறான உணவுகளைத் தயாரிக்கப்படும் அல்லது அவ்வாறான உணவுகள் தயாரிப்பதற்கான பொருட்களைக் களஞ்சியப்படுத்தி வைக்கும் இடமும்
இதில் உள்ளடங்கும்.

01-909/2

---

**கிழக்கு மாகாண மாகாண சபை**

துணைவிதிகள்

**மண்முனை மேற்கு பிரதேச சபை**

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவு (1) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1989ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள்) சட்டத்தின் பிரிவு 2 இனால் கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சராகிய நஸீர் அகமட் ஆகிய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைவாக, 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 126 விடயம் (IX) (ஓ) இன் கீழ்

**மண்முனை மேற்கு** பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்டுள்ள அபாயகரமான மற்றும் விரும்பத்தகாத தொழில்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகள் என்னால் அங்கீகரிக்கப்பட்டமையை பகிரங்கப்படுத்த இத்தால் கட்டளையிடுகின்றேன்.

நஸீர் அகமட்,
கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும்
உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்.

கிழக்கு மாகாண முதலமைச்சுச் செயலகம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை,
2015, நவெம்பர் 06.

**அபாயகரமான மற்றும் விரும்பத் தகாத தொழில்கள் பற்றிய துணை விதிகள்**

இத்துணைவிதிகள் இதனகத்துப்பின்னர் "பிரதேச சபை" எனக் குறிக்கப்படும் **மண்முனை மேற்கு** பிரதேசசபை அதிகாரப் பிரதேசத்தினுள் இதனகத்துப்பின்னர் "தொழில்கள்" என விபரிக்கப்படும் **அபாயகரமான மற்றும் விரும்பத் தகாத தொழில்**களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. இத்துணைவிதிகளில் தொழில்கள் என்பது பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதும் இத்துடன் அட்டவணைகள் I, II மற்றும் III களில் நிரலிடப்பட்டுள்ளதுமான தொழில்களை குறித்து உள்ளடக்கும்.

3. தவிசாளரால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் பிரதேச சபைப் பிரதேசத்தினுள் இத்துணைவிதிகளினால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள தொழில்களை கொண்டு நடாத்துதல் ஆகாது.

4. இத்துணைவிதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப் பத்திரங்களும் இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

5. இத்துணைவிதிகள் வலுவிற்கிடப்படுகின்ற தினத்திற்கு முன்னரான காலப்பகுதியில் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் செயற்பாட்டில் இருக்கின்ற தொழில்களுக்கு துணைவிதிகள் 3 இன் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகாது என்பதுடன் அத்தகைய தொழில்கள் இதனகத்துப்பின்னரான ஏற்பாடுகளுக்கமைவாக அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய காலப்பகுதிக்குள் அத்தகைய நபர்கள் அத்தகைய தொழில்களை கொண்டு நடாத்துதல் இத்துணைவிதிகளின் கீழ் சட்டமுறையானதாதலும் வேண்டும்.

6. பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானித்து அறவிடப்படுகின்ற கட்டணமொன்றினைச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்படுகின்ற அனுமதிப்பத்திரமொன்றின் ஊடாக எவரேனும் நபர் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் இத்துணைவிதிகளினால் ஏற்பாடுசெய்யப்படுகின்ற தொழில்களைக் கொண்டுநடாத்த அனுமதிப்பத்திரமொன்றிற்கு விண்ணப்பிக்கலாம்.

7. ஏதேனும் நியாயமான காரணங்கள் இருந்தாலன்றி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற தினத்திலிருந்து 14 வேலை நாட்களுக்குள் அத்தகைய நபருக்கு அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவது பிரதேச சபையின் கடமையாதல் வேண்டும்.

8. இத்துணைவிதிகளின் கீழ் பிரதேச சபையினாலோ அல்லது தவிசாளராலோ அல்லது எவரேனும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தராலோ எவரேனும் ஆளுக்கு விடுக்கப்பட்ட அறிவித்தலொன்று,-

(அ) அத்தகைய அறிவித்தல் கிடைக்க வேண்டியவருக்கு தபாலில் அனுப்பிவைக்கப்படுவதற்காக உறுதிசெய்யப்பட்டதென்பதை நிரூபிக்கக்கூடிய வகையில் தபாலுக்காக ஒப்படைக்கப்பட்டால் ; அல்லது

(ஆ) அவரிடம் அல்லது அவரது முகவரியில் அப்போதைக்கு குடியமர்ந்துள்ள எவரேனும் ஆளிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பின் ; அல்லது

(இ) அவர் குடியமர்ந்துள்ள இடத்தில் அல்லது அவரால் தனது பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற இடத்தில் எந்தவோர் இடத்திலும் ஒட்டப்பட்டிருப்பின் அத்தகைய அறிவித்தல் முறையாக ஒப்படைக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டுமென்பதோடு அது எவ்விதத்திலேனும் ஒப்படைக்கப்படுவது சட்டமுறையானதாக அமைதலும் வேண்டும்.

9. இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் தவிசாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஏதேனும் கருமம் அல்லது பணி, அவரால் பிரதேச சபையின் உத்தியோகத்தர் எவருக்கேனும் எழுத்துமூலம் பணிக்கப்படுகின்ற பணிப்புகளுக்கு கட்டுப்பட்டதாக ஒப்படைக்கப்பட முடியுமென்பதோடு அவ்வாறான அதிகாரம் பெற்ற ஆளொருவரினால் அத்தகைய சாட்டுதல் கடிதத்தில் பணிக்கப்பட்டுள்ள பணிப்புக்களுக்கு கட்டுப்பட்ட வகையில் செயற்படுதல் சட்டமுறையானதாக அமைவதோடு அத்தகைய கருமம் அல்லது பணி இத்துணைவிதிகள் மூலமாக தவிசாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் அவரால் புரியப்பட்ட கருமம் அல்லது பணியாகக் கருதப்படுதலும் வேண்டும்.

10. இத்துணைவிதிகளின் பணிப்பு அல்லது பணிப்புக்களின் கீழ் அனுமதிப்பத்திரம்பெற்ற இடமொன்றைப் பரிசோதனை செய்ய தவிசாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டுமென்பதோடு எவரேனும் அனுமதிப்பத்திரதாரரால் பரிசோதனை செய்ய அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அனுமதிப்பத்திரதாரரின் கருமமாக அமைதல் வேண்டும். அத்துடன், அத்தகைய ஏதேனும் பரிசோதித்தலைத் தடுக்கவோ தடையேற்படுத்தவோ கூடாது.

11. இத்துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, இத்துணைவிதிகளின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள தொழில்களை நடாத்துவதற்கு தவிசாளரால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.-

(அ) கட்டடம் அல்லது கட்டடப் பகுதி:

(i) தவிசாளர் திருப்தியடையும் அளவிற்கு பலமான மற்றும் உத்தேச அளவில் வாடிக்கையாளர்களுக்கு வசதிகளை செய்து கொடுப்பதற்கு போதியளவான இடவசதிகளைக் கொண்டுள்ளதாகவும், அபாய நேர்வுக்கான அச்சுறுத்தல்கள் மற்றும் பாதிப்புகள் அற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

(ii) குறித்த வளாகத்தை முறையாக பேணிவருதல் வேண்டும் என்பதுடன் நல்ல முறையில் காற்றோட்டமும், வெளிச்சமும் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு அறையிலும் வெளிப்புறமாக திறக்கக்கூடிய யன்னல்கள் இருத்தல் வேண்டும்.

(iii) தவிசாளர் திருப்தியடையும் அளவிற்கு ஒவ்வொரு பகுதியிலும் அமைந்துள்ள அறைகளின் சுவர்கள் செங்கல், கருங்கல், கபுக் கற்கள் அல்லது வேறு பாதுகாப்புடன் கூடிய பொருத்தமான பொருட்களைக் கொண்டு 2.14 மீற்றருக்கு குறையாத உயரத்தைக் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அச்சுவர்களின் பாதுகாப்புடன் கூடிய பொருத்தமான உகந்த பொருட்களைப் பயன்படுத்தி சாந்து பூசப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் உட்புறமாக எஞ்சியுள்ள பகுதி சுண்ணாம்பு மூலம் சாந்து பூசப்பட்டிருத்தல் போதுமானதாகும்.

(iv) ஒவ்வொரு தாழ்வார மூலையும் நில மட்டத்திலிருந்து 2 மீற்றருக்கும் அதிகமான உயரத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

(v) தவிசாளர் நிர்ணயித்துக் குறித்துரைக்கப்பட்டுள்ள தரநியமங்களுக்கு ஏற்புடையவாறு கூரையானது நீண்டகாலம் நிலைத்திருக்கக்கூடிய மூலப்பொருளினால் நிர்மானிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) கட்டடத்திலுள்ள மரப்பலகையினாலான சகல பொருத்துதல்களும் பலகைகளுக்கான பாதுகாப்புப் பூச்சுக்கள் மற்றும் வர்ணம் அல்லது பலகை மெருகூட்டல்கள் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(vii) தவிசாளரால் நிர்ணயித்துக் குறித்துரைக்கப்பட்டுள்ள தரநியமங்களுக்கு ஏற்புடையவாறு நீர் கசியாதவாறு சகல நிலப்பகுதிகளும் சீமெந்தினால் ஏற்புடையவாறு நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) தவிசாளரால் நிர்ணயித்துக் குறித்துரைக்கப்பட்டுள்ள தரநியமங்களுக்கு ஏற்புடையவாறு வடிகாலமைப்பொன்று முழு வளாகத்திற்கும் இருத்தல் வேண்டும்.

(ix) உட்புறத்தில் மின்சார கம்பிகளை பொருத்தல் மற்றும் அவற்றுக்காக பொருத்தப்பட்டுள்ள தேவையான பாதுகாப்பு முன்ஆயத்த நடவடிக்கைகள் தொடர்பில் மின்சார அத்தியட்சகர் ஒருவர் அல்லது அதற்காக தொழில்சார் அடிப்படையில் பயிற்சி பெற்றுள்ள தொழில்நுட்ப அலுவலர் ஒருவர் அல்லது பிரதேச சபையின் தவிசாளரினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவரினால் குறித்த வளாகத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரரும் பூர்த்தி செய்திருக்கவேண்டிய பொதுவான விடயங்கள்:

(i) ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரரும் தமது தொழிலினை மேற்கொண்டு செல்வதற்குத் தேவையான மூலப்பொருட்கள் எவ்வித துர்நாற்றமோ அல்லது வேறு வகையிலான தொற்றுகளோ ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் களஞ்சியப்படுத்தல் வேண்டும்.

(ii) ஏதேனும் துர்நாற்றமோ அல்லது வேறு வகையிலான தீங்கையோ ஏற்படுத்தக்கூடிய பொருளொன்றை பொது இடம் அல்லது பொது வீதி ஊடாக கொண்டு செல்லும் போது அவற்றினால் பொது மக்களுக்கு எவ்வித தீங்கும் அல்லது துர்நாற்றமும் ஏற்படாதிருக்கும் பொருட்டு அவற்றை மூடியிடப்பட்ட மற்றும் நீர் கசியாத கொள்கலன்களில் அடைத்துக் கொண்டு செல்லல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரரும் யாதாயினுமொரு உற்பத்திச் செயற்பாட்டின் போது வெளிப்படுத்தப்படுகின்ற யாதாயினும் விரும்பதகாத வாயு அல்லது பாதகமான வாயுக்கள் தீங்கான விளைவுகளை ஏற்படுத்தாதவாறு அவை பரந்து செல்லும் வகையிலான உயரத்திற்கு விடுவிக்கப்படுவதற்கு அல்லது சுகாதார வைத்திய அதிகாரியின் சிபாரிசுக்கு அமைய நேரடியாக தீயின் ஊடாக அனுப்புவதற்கு அல்லது செறிவூட்டக்கூடிய கருவியினுள் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

(iv) ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரரும் குறித்த தொழில் மேற்கொள்ளப்படுகின்ற வளாகத்திற்கு போதிய வடிகால் வசதிகளை வழங்கி அவற்றை சிறப்பாகப் பேணிவருவதுடன் அவற்றை தினமும் கழுவுதல் வேண்டும்.

(v) ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரரும் தொழிலை மேற்கொண்டு செல்கின்ற வளாகத்தின் நிலத்தை ஏதேனும் நீரியற்பதார்த்தங்கள் ஊடுருவிச் செல்ல முடியாத பொருட்களைப் பயன்படுத்தி நிர்மாணித்திருப்பதுடன், நல்ல முறையில் பேணிவருவதற்கும், நாளாந்தம் சுத்தம் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

(vi) ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரரும் குறித்த தொழிலைப் பேணிவருகின்ற வளாகத்தின் சுவர்கள், கழிவுப்பொருட்களிலிருந்து வெளிப்படுத்தப்படும் ஈரப்பதனை உறிஞ்சுவதைத் தடுப்பதற்கு ஏற்றவாறு நல்ல நிலையில் பேணிவருதல் வேண்டுமென்பதுடன்,அவற்றுக்கு வருடாந்தம் வர்ணம் பூசப்படலும் வேண்டும்.

(vii) ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரரும் குறித்த தொழில் சம்பந்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் பாத்திரங்கள் உள்ளிட்டவற்றை சுத்தமாக பேணிவருவதுடன், நாளாந்தம் சுத்தம் செய்வதற்கும் பொறுப்புடன் செயற்படுதல் வேண்டும்.

(viii) ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரரும் கழிவுப்பொருட்கள் மற்றும் உப உற்பத்திகளுடன் சகல அகற்றும் பொருட்கள், பெருக்கப்பட்டவை மற்றும் எஞ்சியுள்ள பகுதிகளை தொடர்ந்தும் குறித்த வளாகத்தில் தொழில் நடவடிக்கைகளுக்காக உடனடியாக பயன்படுத்தாத பட்சத்தில் நாளாந்தம் மூடப்பட்ட கொள்கலன்களில் இட்டு அகற்றுதல் வேண்டும்.

(ix) ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரரும் உடலைக் கழுவுதல் அல்லது வேறு பொருட்களை உள்ளே இட்டுக் கழுவுவதற்காக பயன்படுத்துகின்ற தாங்கிகள் துர்நாற்றம் வீசுவதைத் தடுப்பதற்குத் தேவையானவாறு முடிந்தளவு வெறுமையாக்கப்பட்டு சுத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

(x) வெறியேற்றப்படும் கழிவுநீரை உறிஞ்சியிழுக்கக்கூடிய கிடங்கிற்கு பாய்ந்தோடுவாற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(xi) சாதாரண தீ அணைக்கும் கருவிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் இத்துணைவிதிகளில் விபரிக்கபட்டிருக்கும் தொழில்களுக்கு மின்சாரத்தொடர்பு பெறப்பட்டிருப்பின் மேலதிகமாக மின்சார தீ அணைப்பு கருவிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

12. தொழில்கள் பேணிவரப்படும் இடத்தில் சகல பகுதிகளும் முட்புதர்கள் அல்லது செடிகொடிகள் இன்றியும் நுளம்புகள் அல்லது வேறு ஏதேனும் தொற்றுநோய்க்கிருமிகள் பரவாதவாறும் நீர் தேங்கி நிற்பதைத் தடுத்துக் கொள்வதும் அனுமதிப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

13. துர்நாற்றம் அல்லது நச்சுப் பொருந்திய ஏதேனும் வாயு வகைகள் வெளியேறுவதைத் தடுப்பதற்கு அவசியமான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலேயொழிய ஏதேனும் நச்சுத் தன்மை வாய்ந்த அல்லது தொல்லைதரும் துர்நாற்றம் வீசும் ஏதேனும் பொருள் அபாயகரமான மற்றும் விரும்பத் தகாத தொழில்கள் புரியும்வளவில் களஞ்சியப்படுத்துதல், பாவனைக்கு எடுத்தல் அல்லது அவ்வாறு செய்வித்தல் எவராலும் புரியப்படலாகாது.

14. தொழில்களின்போது பாவனையின் பின்னர் வெளியேற்றப்படும் கழிவுநீரை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொது நீர்வழிகளுக்குப் பாய்ச்சுதல் ஆகாது.

15. இத்துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென பணிக்கப்பட்டுள்ள பாகங்களுக்கு குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு தடவை வீதம் வர்ணப்பூச்சு பூசுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அனுமதிப்பத்திரதாரரின் பொறுப்பாதல் வேண்டும்.

16. தொழில்கள் புரியப்படும் இடத்தின் அனைத்து அறைகள் அத்துடன் அவற்றின் சுற்றாடல், வடிகான்கள், மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் போன்றவை நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

17. பாவிக்கப்பட்ட பொதிகளைச் சுத்தம் செய்து மீண்டும் பாவித்து பொதி செய்வதற்காக அத்தகைய பொதிகளை உபயோகிக்கும் போது அத்தகைய பாவிக்கப்பட்ட பொதிகளை சுத்தம் செய்கையில்-

(அ) அத்தகைய பொதிகளில் முன்னர் ஒட்டப்பட்டிருந்த லேபிள்களை அகற்றுவதற்கும் முதற்சுற்றில் சுத்தம் செய்வதற்காக தொட்டியொன்றும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய பொதிகள் இறுதிச் சுற்றில் சுத்தம் செய்வதற்கு பிறிதொரு தொட்டியும் என்றவாறு குறைந்த பட்சம் இரண்டு தொட்டிகள் பாவிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய இறுதிச் சுத்திகரிப்பு ஓடும் நீரில் கழுவப்பட வேண்டுமென்பதை அனுமதிப்பத்திரதாரர் கருத்திற் கொள்ளல் வேண்டும்.

18. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக்காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய அவர் தொழில்கள் நடவடிக்கைகள் மற்றும் கருமங்களில் ஈடுபடுதல் அல்லது அவரை ஈடுபடுத்துதல் ஆகாது.

(ஆ) தொழில்கள் புரியப்படும் இடத்தின் அனைத்து ஊழியர்களும் வருடத்திற்கு ஒரு தடவை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

19. தொழில்கள் புரியப்படும் இடத்தில் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் பாதுகாப்பான முகக்கவசம், கைக்கவசம் மற்றும் தேவைப்படும் வேறு பாதுகாப்பு அணிகள் வழங்கப்படுதலும், அவ்வூழியர்கள் அத்தொழில்கள் புரியப்படும் இடத்தில் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு அணிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் அனுமதிப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

20. (அ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்பட்டாலன்றி, அக்கழிவுப் பொருட்கள்-

(i) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள் ;

(ii) கண்ணாடிப் பொருட்கள் ;

(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள் ;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள் ;

(vi) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின்போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள் ;

(vii) ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்

என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களை இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் சேர்த்தல் அனுமதிப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

(ஆ) மேலே (அ) பிரிவில் குறிப்பிட்டவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இடப்பட்ட கழிவுப் பொருட்கள், பிரதேச சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாயினன்றி தவிசாளரின் பணிப்பிற்கமைய இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேண்டும்.

21. இத்துணைவிதிகளின் பணிப்புக்களைப் பரிசீலனை செய்வதற்கு தவிசாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக, அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தொழில்கள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சந்தர்ப்பமும் அத்தகைய நேரமாகக் கருதப்படுதல் வேண்டும்.

22. இத்துணைவிதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் இடம் 11 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய செயற்படுதல் முடிவுறுத்தப்படுமாயின் அல்லது இத்துணைவிதிகளில் வேறு ஏதேனும் துணைவிதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அத்தகைய பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரதாரருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை தவிசாளர் அந்த அனுமதிப்பத்திரதாரருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

23. 22ஆவது துணைவிதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரதாரர் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறு ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை செயற்படுத்துமுகமாக அனுமதிப்பத்திரதாரர் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கின்ற ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் தவிசாளருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும், அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதினான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

24. 23ஆவது துணைவிதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரதாரர் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை தவிசாளரால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

25. இத்துணைவிதிகளின் ஏதேனும் ஏற்பாடு ஒன்றையோ அல்லது பலவற்றையோ பிரதேச சபைப் பிரதேசத்தினுள் எவரேனும் நபர் மீறுவது 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 122(2) இன் ஏற்பாடுகளுக்கமைவாக நியாயாதிக்கமுள்ள நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டதன் பேரில்:-

(i) அந்நபர் குற்றவாளியாகக் காணப்பட்ட தவறொன்றுக்காக ரூபா 750.00 அபராத விதிப்பு செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் ;

(ii) அந்நபரால் குறித்த குற்றம் தொடர்ச்சியாகப் புரியப்படுகின்ற அத்தகைய சந்தர்ப்பத்தில் தொடரப்படுகின்ற நாள் ஒன்றுக்கு ரூபா 250.00 அபராத விதிப்பும் செலுத்தப்படுதல் வேண்டும்.

26. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இத்துணைவிதிகளில்,-

'**பிரதேச சபைப் பிரதேசம்**' என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபை அமைந்துள்ள நியாயாதிக்க பிரதேசத்தையும் ;

'**பிரதேச சபை**' என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபையையும் ;

'**அனுமதிப்பத்திரதாரர்**' என்பது, இத்துணைவிதிகளிலான பணிப்புக்களின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள எவரேனும் ஆள் எனக் கருதப்படுவதோடு மேற்படி அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் பொறுப்பாளியோ, முகாமையாளரோ அப்போதைக்கு அவ்விடத்தின் பணிகளை நிர்வகிக்க பொறுப்பாகவுள்ள எவரேனும் ஆளையும் ;

'**அனுமதிப்பத்திரம் பெற்ற இடம்**' என்பது, இத்துணைவிதிகளிலான பணிப்புக்களின் கீழ் எந்த இடத்தைப் பாவிக்க அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோ, அந்த இடத்தையும் ;

'**அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்**' என்பது, அக்கருமத்திற்காக தவிசாளரால் ஆவணமொன்றினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பிரதேச சபையின் எவரேனும் உத்தியோகத்தரையும் ;

'**செயலாளர்**' என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபையின் செயலாளரையோ அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கருமங்கள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தரையும் ;

'**தவிசாளர்**' என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபையின் தவிசாளரையும் குறிக்கும்.

**அட்டவணை I - விரும்பத்தகாத தொழில்கள்**

1. காரீயம் தரப்படுத்தலும், பதனிடுதலும் மற்றும் காரீயம் களஞ்சியப்படுத்தல்
2. உரத்தை அல்லது இரசாயன உரத்தை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல்
3. விலங்குத் தோல்களை பதனிடுதல்
4. விலங்குத் தோல்களை விற்பனை செய்தல்
5. விலங்கு வேளாண்மை (உணவுக்காக, பால் அல்லது முட்டை)
6. மாசிக் கருவாட்டை உற்பத்தி செய்தல்
7. இறப்பர் உற்பத்தி மற்றும் இறப்பர் ரொட்டியை களஞ்சியப்படுத்தல்
8. விலங்கு மருத்துவமனையை வைத்திருத்தல்
9. மொத்த வியாபார நோக்கத்துடன், அழுகக்கூடிய உணவுகள் அல்லது உணவுப்பொருட்களை வைத்திருத்தல்
10. 150 கிலோ கிறாமை விஞ்சுகின்ற அளவில் கருவாடு, கடல் மீன் அல்லது ஜாடி மீனை வைத்திருத்தல்
11. இறைச்சி அல்லது மீனைப் பயன்படுத்தி ஜாடி தயார் செய்தல், இறைச்சி அல்லது மீனை காய்ச்சுதல் அல்லது இறைச்சி அல்லது மீனை குளிரூட்டல்
12. சிரட்டைக்கரி அல்லது சிரட்டைக்கரியல்லாத கரியை உற்பத்தி செய்தல்
13. புகையிலையை காய்ச்சுதல்
14. விலங்கு உணவு உற்பத்தி செய்தல்
15. புண்ணாக்கை உற்பத்தி செய்தல்
16. விலங்குகளின் இறைச்சி அல்லது இரத்தத்தை புளிக்கச் செய்தல்
17. சவர்க்காரம் உற்பத்தி செய்தல்.
18. விலங்கு எலும்புகளை அரைத்தல் மற்றும் வைத்திருத்தல்
19. பெட்டிகளை உற்பத்தி செய்தல்
20. பழைய உலோகம் மற்றும் புதிய உலோகத்தை வைத்திருத்தல்
21. உலோக உடைந்த துண்டுகளை வைத்திருத்தல்
22. வீட்டுத் தளபாடங்களை உற்பத்தி செய்தல்
23. பிரம்பு பொருட்களை உற்பத்தி செய்தல்
24. தச்சுப்பணி நிலையமொன்றை பேணிவருதல்
25. சிறப் அல்லது பழச்சாறு பானங்களை உற்பத்தி செய்தல்
26. இனிப்புப் பண்டங்களை உற்பத்தி செய்தல்
27. தென்னந் தும்பை பதனிடல்
28. தூரிகை உற்பத்தி செய்தல் (பற் தூரிகை அல்லாத)
29. பற்தூரிகை உற்பத்தி செய்தல்.
30. கள் உற்பத்தி செய்தல்
31. வினாகிரி உற்பத்தி செய்தல்
32. மரப் பலகை அரிதல்.
33. பூச்சு, வார்னிஸ் அல்லது டிஸ்ரம்பரர் உற்பத்தி செய்தல்
34. சோடா உற்பத்தி செய்தல்
35. பைபருக்கு வர்ணம் பூசுதல்
36. தோளினாலான பொருட்களை உற்பத்தி செய்தல்
37. பழவகை, மீன் அல்லது வேறு உணவுப் பொருட்களை தகர ரின்களில் அடைத்தல்
38. கோப்பி, தானியங்களை தூளாக்குதல்.
39. பேகிங் பவுடர் உற்பத்தி செய்தல்.
40. கேஸ் மென்ரல் உற்பத்தி செய்தல்

41. பலகைக்கான பூச்சு வகைகளை உற்பத்தி செய்தல் (பொட்டி)
42. மெழுகுவர்த்தி உற்பத்தி செய்தல்
43. கற்பூரம் உற்பத்தி செய்தல்
44. எழுதும் மை, அச்சு மை மற்றும் ஸ்ரென்சில் மையை உற்பத்தி செய்தல்
45. துணி துவைப்பதற்கான நீலத்தூளை உற்பத்தி செய்தல்
46. லெக்கர் உற்பத்தி செய்தல்
47. ஒப்பனைச் சாதனங்களை உற்பத்தி செய்தல்
48. பாடசாலைகளுக்கான சுண்ணாம்புக் கட்டிகளை உற்பத்தி செய்தல்
49. ரயர் மற்றும் ரியுப்களை உற்பத்தி செய்தல்
50. ரயர்களை மீண்டும் நிரப்புதல்
51. ரயர்கள் மற்றும் ரியுப்களை வெல்கனைஸ் செய்தல்
52. சீமெந்து உற்பத்தி செய்தல்
53. சீமெந்துப் பொருட்கள் மற்றும் எஸ்பெஸ்ரொஸ் சீமெந்து பொருட்களை உற்பத்தி செய்தல்
54. மணல் கடதாசி உற்பத்தி செய்தல்
55. பிளாஸ்ரிக் பொருட்களை உற்பத்தி செய்தல்
56. செங்கல் சுடுதல்
57. பொறிமுறை வலு பயன்படுத்தப்படும் நெசவாலையொன்றை வைத்திருத்தல்
58. ஒட்சிசன் உற்பத்தி செய்தலும், மீள்நிரப்பலும்
59. ஓடு உற்பத்தி செய்தல்
60. உரம், சுண்ணாம்பு, மா அல்லது வேறு பொருட்களை இடுவதற்கான சணற்பைகளை சுத்தப்படுத்துவதும், அவற்றை விற்பனை செய்வதும்
61. இயந்திரங்களைப் பயன்படுத்தி சீமெந்து புளொக் கற்களை உற்பத்தி செய்தல்

## அட்டவணை II - அபாயகரமான தொழில்கள்

1. கல்குவாரிகளை பேணிவருதல்
2. மரக்கறி எண்ணெய் உற்பத்தி செய்தல்
3. தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்தல்
4. தீப்பெட்டி உற்பத்தி செய்வதும், களஞ்சியப்படுத்துவதும்
5. மெதிலேட் ஸ்ப்ரிட் உற்பத்தி செய்தல்
6. தேயிலைப் பெட்டி உற்பத்தி செய்தல்
7. தும்பு அல்லது வேறு நார்கள் மூலமான பொருட்களை உற்பத்தி செய்தல்
8. தும்பு அல்லது வேறு நார்களை உற்பத்தி செய்தல்
9. வைக்கோலை வைத்திருத்தல்
10. அணிந்த ஆடைகளை களஞ்சியப்படுத்தல்
11. ஆபரணங்களை உற்பத்தி செய்வதும், புதுப்பித்தலும்
12. இயந்திர சாதனங்களை பயன்படுத்தி பலகை அரிதல்
13. சுண்ணாம்புக் கல் அகழ்தல்
14. இயந்திர பட்டறையொன்றை பேணிவருதல்
15. வெற்று போத்தல்கள் மற்றும் வெற்று சணல்பைகளை வைத்திருத்தல்
16. சைக்கில் மற்றும் மோட்டார் சைக்கிலை திருத்தல்
17. பயன்படுத்திய செய்திப்பத்திரிகை மற்றும் கடதாசியை வைத்திருத்தல்
18. விசிறும் பூச்சு வேலைகள் (Spray painting)
19. வானவேடிக்கை மற்றும் பட்டாசுகளை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
20. உலோகக் கைத்தொழில்கள் (இயந்திரசாதனம், கருவிகள் மற்றும் பாத்திரங்களை உற்பத்தி செய்தல்)

**அட்டவணை III - விரும்பத்தகாத மற்றும் அபாயகரமான தொழில்கள்**

1. கிரபைட் (காரீயம்) பதனிடல்.
2. கந்தகப் புகையைப் பயன்படுத்துவதன் மூலம் கறுவா, ஏலக்காய் அல்லது நார் என்பவற்றைப் பதனிடுதல்.
3. ஆடைகளை டிரைகிளீன் செய்தல் மற்றும் வர்ணமிடுதல்
4. ஆடைகளை அச்சிடுதல், வர்ணமிடுதல் மற்றும் பத்திக் சித்திரமிடுதல்
5. மின்னியல் உலோகம் பூசுதல்
6. எண்ணெய் அல்லது விலங்கு கொழுப்பு உற்பத்தி செய்தல்
7. சுண்ணாம்புக் கற்களை சுடுதல்
8. வானவேடிக்கை அல்லது பட்டாசு உற்பத்தி செய்தல்
9. மீன் எண்ணெய் தயார்செய்தல்
10. படகு உற்பத்தி செய்தல்
11. பற்றறிகள் மின்னூட்டப்படுதல் அல்லது புதுப்பித்தல்
12. உலோகத்தை உருக்கியொட்டல் (Welding)
13. மோட்டார் வாகனங்கள் பழுதுபார்த்தல்
14. மோட்டார் வாகனங்கள் சேர்விஸ் செய்தல்
15. இயந்திரங்களைப் பயன்படுத்தி உலோகங்களை அரைத்தல்
16. லேத் வேலைத்தளத்தை பேணிவருதல்
17. ரிங்கரின் வேலைத்தளத்தைப் பேணிவருதல்
18. மோட்டார் வாகன வெளிஉடற்பகுதியை உற்பத்தி செய்தல்
19. பூச்சிகொல்லிகளை உற்பத்தி செய்தல் அல்லது மீள்நிரப்பல்
20. கிருமிநாசினி உற்பத்தி செய்தல்
21. நுளம்புச் சுருள்களை உற்பத்தி செய்தல்

01-909/3

---

**கிழக்கு மாகாண மாகாண சபை**

துணைவிதிகள்

**மண்முனை மேற்கு பிரதேச சபை**

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவு (1) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1989ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள்) சட்டத்தின் பிரிவு 2 இனால் கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சராகிய நஸீர் அகமட் ஆகிய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைவாக, 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 126 விடயம் (IX) (ஏ) இன் கீழ் **மண்முனை மேற்கு** பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்டுள்ள சாப்பாட்டுக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் தேநீர் அல்லது கோப்பிக் கடைகளை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகள் என்னால் அங்கீகரிக்கப்பட்டமையை பகிரங்கப்படுத்த இத்தால் கட்டளையிடுகின்றேன்.

நஸீர் அகமட்,
கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும்
உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்.

கிழக்கு மாகாண முதலமைச்சுச் செயலகம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை,
2015, நவெம்பர் 06.

**சாப்பாட்டுக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் தேநீர் அல்லது கோப்பிக் கடைகள் பற்றிய துணைவிதிகள்**

இத்துணைவிதிகள் இதனகத்துப்பின்னர் பிரதேச சபை எனக் குறிக்கப்படும் **மண்முனை மேற்கு** பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் சாப்பாட்டுக் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் தேநீர் அல்லது கோப்பிக் கடைகளை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. தவிசாளரால் இத்துணைவிதிகளின் நோக்கத்திற்காக குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் ஓர் அனுமதிப் பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் பிரதேச சபைப் பிரதேசத்தினுள் சாப்பாட்டுக் கடை, சிற்றுண்டிச்சாலை மற்றும் தேநீர் அல்லது கோப்பிக் கடையொன்றை நடாத்துதல் ஆகாது.

3. இத்துணைவிதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப் பத்திரங்களும் இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

4. இத்துணைவிதிகள் வலுவிற்கிடப்படுகின்ற தினத்திற்கு முன்னரான காலப்பகுதியில் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் செயற்பாட்டில் இருக்கின்ற சாப்பாட்டுக் கடைகள், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் தேநீர் அல்லது கோப்பிக் கடைகளுக்கு துணைவிதிகள் 2 இன் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகாது என்பதுடன் அத்தகைய சாப்பாட்டுக் கடைகள், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் தேநீர் அல்லது கோப்பிக் கடைகள் இதனகத்துப்பின்னரான ஏற்பாடுகளுக்கமைவாக அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய காலப்பகுதிக்குள் அத்தகைய நபர்கள் சாப்பாட்டுக் கடைகள், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் தேநீர் அல்லது கோப்பிக் கடைகளைக் கொண்டு நடாத்துதல் இத்துணைவிதிகளின்கீழ் சட்டமுறையானதாதலும் வேண்டும்.

5. பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானித்து அறவிடப்படுகின்ற கட்டணமொன்றினைச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்படுகின்ற அனுமதிப்பத்திரமொன்றின் ஊடாக எவரேனும் நபர் பிரதேச சபைப் பிரதேசத்தினுள் ஏதேனும் சாப்பாட்டுக்கடை, சிற்றுண்டிச்சாலை மற்றும் தேநீர் அல்லது கோப்பிக் கடையொன்றைக் கொண்டு நடாத்த அனுமதிப்பத்திரமொன்றிற்கு விண்ணப்பிக்கலாம்.

6. எவையேனும் நியாயமான காரணங்கள் இருந்தாலன்றி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற தினத்திலிருந்து பதினான்கு வேலை நாட்களுக்குள் அத்தகைய நபருக்கு அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவது பிரதேச சபையின் கடமையாதல் வேண்டும்.

7. இத்துணைவிதிகளின் கீழ் பிரதேச சபையினாலோ அல்லது தவிசாளராலோ அல்லது எவரேனும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தராலோ எவரேனும் ஆளுக்கு விடுக்கப்பட்ட அறிவித்தலொன்று,-

(அ) அத்தகைய அறிவித்தல் கிடைக்க வேண்டியவருக்கு தபாலில் அனுப்பி வைக்கப்படுவதற்காக உறுதிசெய்யப்பட்டதென்பதை நிரூபிக்கக்கூடிய வகையில் தபாலுக்காக ஒப்படைக்கப்பட்டால் ; அல்லது

(ஆ) அவரிடம் அல்லது அவரது முகவரியில் அப்போதைக்கு குடியமர்ந்துள்ள எவரேனும் ஆளிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பின் ; அல்லது

(இ) அவர் குடியமர்ந்துள்ள இடத்தில் அல்லது அவரால் தனது பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற இடத்தில் எந்தவோர் இடத்திலும் ஒட்டப்பட்டிருப்பின் அத்தகைய அறிவித்தல் முறையாக ஒப்படைக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டுமென்பதோடு அது எவ்விதத்திலேனும் ஒப்படைக்கப்படுவது சட்டமுறையானதாக அமைதலும் வேண்டும்.

8. இத்துணைவிதிகளின் ஏதேனும் பகுதியொன்றிலான ஏற்பாடுகளின் கீழ் தவிசாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஏதேனும் கருமம் அல்லது பணி, அவரால் பிரதேச சபையின் உத்தியோகத்தர் எவருக்கேனும் எழுத்துமூலம் பணிக்கப்படுகின்ற பணிப்புகளுக்கு கட்டுப்பட்டதாக ஒப்படைக்கப்பட முடியுமென்பதோடு அவ்வாறான அதிகாரம் பெற்ற ஆளொருவரினால் அத்தகைய சாட்டுதல் கடிதத்தில் பணிக்கப்பட்டுள்ள பணிப்புக்களுக்கு கட்டுப்பட்ட வகையில் செயற்படுதல் சட்டமுறையானதாக அமைவதோடு அத்தகைய கருமம் அல்லது பணி இத்துணைவிதிகள் மூலமாக தவிசாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் அவரால் புரியப்பட்ட கருமம் அல்லது பணியாகக் கருதப்படுதலும் வேண்டும்.

9. இத்துணைவிதிகளின் ஏதேனும் பகுதியொன்றிலான பணிப்பு அல்லது பணிப்புக்களின் கீழ் அனுமதிப்பத்திரம்பெற்ற இடமொன்றைப் பரிசோதனை செய்ய தவிசாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டுமென்பதோடு எவரேனும் அனுமதிப்பத்திரதாரரால் பரிசோதனை செய்ய அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அனுமதிப்பத்திரதாரரின் கருமமாக அமைதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய ஏதேனும் பரிசோதித்தலைத் தடுக்கவோ தடையேற்படுத்தவோ கூடாது.

10. இத்துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, எந்தவொரு சாப்பாட்டுக் கடை, சிற்றுண்டிச்சாலை மற்றும் தேநீர் அல்லது கோப்பிக் கடையொன்றை நடாத்துவதற்கு தவிசாளரால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.

(i) இடம் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்.

(ii) இடத்தின் அனைத்து அறைகளின் சுவர்களும் 2.5 மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, இரு பக்கங்களுக்கும் சாந்து பூசப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தலும் வேண்டும். எனினும், சமையலறை தவிர்ந்த ஏனைய அறைகள் மரப்பலகையினால் அல்லது ஏதேனும் உலோகத்தகடு வர்க்கத்தினால் அல்லது மரப்பலகையும் ஏதேனும் உலோகத்தகடு வர்க்கத்தினாலும் நிர்மாணிக்கப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் இப்பிரமாணத்திற்கு அமைவானதெனக் கருதுதல் வேண்டும்.

(iii) இடத்திலுள்ள அனைத்து அறைகளுக்கும் உட்கூரைகள் அமைந்திருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய உட்கூரைகள் நிலத்திலிருந்து குறைந்தபட்சம் 2.5 மீற்றர் உயரத்தில் இருத்தல் வேண்டும்.

(iv) அனைத்து அறைகளுக்கும் திறந்து வைக்கக்கூடிய ஜன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு அறையினதும் ஜன்னல்களைத் திறக்கும் போது அத்தகைய ஜன்னல்களின் பரப்பளவு அறையின் தரையின் பரப்பளவின் பதினைந்தில் ஒரு பங்குக்குக் குறையாதிருத்தல் வேண்டும். ஆயினும், ஏதேனும் அறை எயர்கொண்டிஷன் செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இப்பிரமாணம் ஏற்புடையதாகாது.

(v) கூரை ஏதேனும் நிலையான பொருட்களை உபயோகித்து வேயப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) தாழ்வாரத்தின் ஓரங்கள் நில மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 2 மீற்றர் உயரத்தில் இருப்பதுடன், தாழ்வாரம் ஆகக்குறைந்தது 1.5 மீற்றராகவும் இருத்தல் வேண்டும்.

(vii) அனைத்து அறைகளினதும் தரை சீமெந்திடப்பட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(viii) இடத்தினுள் பிறப்பிக்கப்படும் கழிவுகளைச் சேகரிப்பதற்காக கழிவுப் பாத்திரங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, சமையலறையினுள் வைக்கப்படும் கழிவுப் பாத்திரங்கள் இலையான்கள் அல்லது வேறு பூச்சிகள், விலங்குகள் உட்புகாதவாறு மூடிவைக்கக்கூடிய மூடிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ix) இடத்தினுள் பிறப்பிக்கப்படும் கழிவுகளை அப்புறப்படுத்தல் 11 ஆவது துணைவிதியின் பணிப்புகளுக்கமைய செயலாற்றும் விதத்தில் அவசிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(x) இடத்தின் சமையலறையில் பாவிக்கப்படும் அனைத்து மேசைகளும்,-

(அ) மரத்தினால் செய்யப்பட்டு அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இரும்பு, உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் செய்யப்பட்டிருப்பின் அதன் கால்கள் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(xi) இடத்தில் வாடிக்கையாளரின் பாவனைக்கு வைக்கப்பட்டுள்ள அனைத்து மேசைகளும்,-

(அ) மரத்தினால் செய்யப்பட்டு அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத்தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இரும்பு, உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் செய்யப்பட்டிருப்பின் அதன் கால்கள் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(xii) பாவனைக்கு எடுக்கின்ற நீர் மனித நுகர்வுக்குப் பொருத்தமானதென தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்பட்ட தரச்சான்றிதழ் பெறப்பட்டிருத்தல் மாத்திரமன்றி குறைந்த பட்சம் ஒவ்வோர் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை வீதம் இத் தரச்சான்றிதழ் பெறப்படல் வேண்டும். இடத்தின் பாவனைக்காக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற நீரைப் பயன்படுத்துவதாயின் அத்தகைய தரச்சான்றிதழ் கிடைத்துள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

(xiii) இடத்தின் கருமங்களுக்காகப் பாவிக்கப்படும் நீரைக் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பின் அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கின்ற நீர் மாசடைவதைத் தடுக்கும் பொருட்டு போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(xiv) வாடிக்கையாளர்களால் பாவிக்கப்பட்ட பாத்திரங்களைக் கழுவுவதற்கு தனிவேறான பகுதியொன்று இடத்தில் இருத்தல் வேண்டும்.

(xv) வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களின் பாவனைக்காகக் குறைந்தது பத்துப் பேருக்கு ஒன்றென்ற வீதம் மலசலகூடங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, பெண்கள் மற்றும் ஆண்களுக்கென தனிவேறாக மலசலகூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xvi) அனைத்து மலசலகூடங்களும் அவற்றின் சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் அல்லது ஏதேனும் துருப்பிடிக்காத உலோகத் தகடுகளால் நிர்மாணிக்கப்பட்டு தரை சீமெந்தினால் சாந்து பூசப்பட்டோ, சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அதே போன்று மேலும் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் கட்டப்பட்ட சுவராயின் சாந்து பூசப்பட்டோ, சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, துருப்பிடிக்காத உலோக தகடுகளால் நிர்மாணிக்கப்பட்ட சுவராயின் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(xvii) இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆட்களின் பாவனைக்காக குளியல் அறைகள் போதியளவு எண்ணிக்கை இருத்தல் வேண்டுமென்பதோடு, (xv) ஆவது பந்தியில் மலசலகூடங்களுக்கு ஏற்புடைய பணிப்புக்களை அத்தகைய குளியல் அறைகளின் தரைகளுக்கும் சுவர்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(xviii) இடத்தில் வாடிக்கையாளர்களின் பாவனைக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில், வாடிக்கையாளர்களின் கைகளைக் கழுவுவதற்கு துருப்பிடிக்காத உலோகத் தகடுகளால் அல்லது மாபிள்களினால் நிர்மாணித்து மெருகூட்டப்பட்டோ அல்லது செங்கல்லினால் அல்லது சிமெந்துக்கல்லினால் கட்டப்பட்ட மாபிள் ஓடு பதிக்கப்பட்ட பேசின் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xix) இடத்தில் எந்தவொரு பகுதியிலும் பாவனையின் பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீரை தடையின்றி பாய்ந்து செல்வதற்குப் பொருத்தமான வடிகான் முறைமையொன்று இருத்தல் வேண்டும்.

(xx) பிரதேச சபையினால் கழிவுநீர் முறைமை மேற்கொள்ளப்பட்டிருப்பின் இடத்தினுள் வெளியாகும் கழிவுநீர் பிரதேச சபையின் பணிப்புக்கமைய அத்தகைய கழிவுநீர் முறைமையில் பாய்ந்து சேரும் ஏற்பாடுகளைச் செய்யமுடியுமென்பதோடு, அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் அத்தகைய கழிவுநீரை, உறிஞ்சியிழுக்கக்கூடிய கிடங்குகளுக்குப் பாய்ந்து செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருத்தல் வேண்டும்.

(xxi) உள்ளே சாதாரண தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, பாதுகாப்பிற்கான வேலைத் திட்டம் வகுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, இடத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டிருப்பின் மேலதிகமாக மின்சார தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(xxii) இடத்தில் தேநீர், கோப்பி அல்லது பால் தயாரிக்கும் பிரிவு இடைவெளியற்றதும் துருப்பிடிக்காததுமான உலோகத் தகடுகளினாலோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்ட அல்லது வேறு ஊடறுக்க முடியாத பொருளால் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*11.* வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென இத்துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பாகங்களுக்கும் குறைந்த பட்சம் வருடத்திற்கு ஒரு தடவை வீதம் வர்ணப்பூச்சு பூசுவதற்கான நடவடிக்கைகளை அனுமதிப்பத்திரதாரர் மேற்கொள்ளல் வேண்டும்.

*12.* அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடம் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு, கழிவுநீர் பாய்ந்தோடும் வடிகான்கள் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

*13.* அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலுள்ள மலசலகூடங்களும் அலம்பகங்களும் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்பட்டு கிருமிநாசினிகள் உபயோகிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, துர்நாற்றம் வீசாது பார்த்துக்கொள்ளலும் வேண்டும்.

*14.* அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உணவு மற்றும் பானங்கள் தயாரிப்பதற்கும், விற்பனைக்காகக் காட்சிக்கு வைப்பதற்கும் மற்றும் வாடிக்கையாளர்களின் பாவனைக்கு உபயோகிக்கப்படும் பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் அவற்றைப் பாவிப்பதற்கு முன்னர் சுத்தமான நீரினால் கழுவுதல் வேண்டுமென்பதோடு, பாவிக்கப்பட்ட பின்னரும் கழுவிச் சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் அனுமதிப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

*15.* அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் சேரும் அனைத்துக் கழிவுகளும் கீழே விபரிக்கப்படும் 17ஆவது துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ள விதத்தில் வகைப்படுத்தி ஊடறுக்க முடியாத பொருளால் ஆக்கப்பட்ட பாத்திரங்களில் இடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கழிவுகள் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு ஒரு தடவை அல்லது அவசியமாயின் அதற்கு மேற்பட்ட தடவைகளிலும் அத்தகைய இடத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய பாத்திரங்களில் கழிவுகளைப் போடும் சந்தர்ப்பமும் அவற்றை அப்புறப்படுத்தும் சந்தர்ப்பமும் தவிர்ந்த மற்றெல்லா நேரத்திலும் அத்தகைய பாத்திரங்கள் நன்றாக மூடிவைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*16.* அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அப்புறப்படுத்தும் கழிவுகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடத்தின் தரையிலோ அல்லது அங்கும் இங்கும் இடுதலோ ஆகாது.

*17.* (அ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்குட்படுத்தப்படக்கூடியதாக இருந்தாலன்றி அக்கழிவுப் பொருட்கள் -

(i) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள் ;

(ii) கண்ணாடிப் பொருட்கள் ;

(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள் ;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள்

(vi) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின்போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள் ;

(vii) ஊறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்

என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களை இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல் அனுமதிப்பத்திரதாரரின் பொறுப்பாகும்.

(ஆ) (அ) பிரிவில் குறிப்பிட்டவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள், பிரதேச சபைக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாக இருந்தாலன்றி தவிசாளரின் பணிப்பிற்கமைய இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேணடும்.

*18.* அனைத்து அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலும் எலிகள், இலையான்கள் அல்லது வேறு பூச்சிகள் அணுகாத வண்ணமும், அத்தகைய இடத்தில் வைக்கப்படும் உணவுகள் அல்லது பானங்கள் தயாரிப்பதற்கு பாவிக்கப்படும் பொருட்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட உணவுகள் மற்றும் பானங்கள் அத்தகைய எலிகள், இலையான்கள் அல்லது வேறு பூச்சிகளால் மாசடைவதைத் தடுப்பதற்கு அவசியமான சகல ஏற்பாடுகளையும் செய்தல் அனுமதிப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

19. வாடிக்கையாளருக்கு உணவு வகைகளை வெறுங்கையினால் பரிமாறுதல் ஆகாதென்பதோடு, அத்தகைய உணவு பரிமாறுகையில் கரண்டி, முள்ளுக் கரண்டி அல்லது பொருத்தமான வேறு உபகரணத்தை உபயோகித்தல் வேண்டும்.

20. எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலும் தரம் குறைக்கப்பட்ட எவ்வகையான பாலை வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்தல் ஆகாது. இத்துணைவிதிகளின் கருமங்களுக்காக தரம் குறைக்கப்பட்ட பால் என்பது நீர் அல்லது வேறு வெளிப்பொருள் அல்லது பொருட்கள் கலக்கப்பட்ட பால் அல்லது கொழுப்பற்ற பால் திண்மப் பொருள் நூற்றுக்கு 85 வீதத்திற்குக் குறைவான அல்லது பாற் கொழுப்பு நூற்றுக்கு 35 வீதத்திற்கு குறைவான பசுப்பால் அல்லது கொழுப்பற்ற பால் திண்மப் பொருள் நூற்றுக்கு 9 வீதத்திற்கோ அல்லது பாற் கொழுப்பு நூற்றுக்கு 7 வீதத்திற்கோ குறைவான எருமைப் பால் எனக் கருதப்படும்.

21. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் எவ்வகையான வியாபாரத்திலும் அல்லது அத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவி சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

(இ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களும் வருடத்திற்கு ஒரு தடவை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுதல் அனுமதிப்பத்திரதாரரின் பணியாதல் வேண்டும்.

22. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உணவு மற்றும் பானங்கள் தயாரிக்கும் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் மேலங்கிகள் வழங்கப்படுதலும், அத்தகைய ஊழியர் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் மேலங்கிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் வேண்டும்.

23. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் சுத்தமான நீர், சுத்தமான துவாய், நகங்களைச் சுத்தப்படுத்தும் தூரிகைகள் மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் போன்றவை வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

24. எந்தவோர் ஆளும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் புகை பிடித்தல் அல்லது வெற்றிலை சப்புதல் அல்லது வேறு ஏதேனும் சுகாதாரக்கேடு விளைவிக்கக்கூடிய பொருளைச் சப்புதல் ஆகாது.

25. இத்துணைவிதிகளின் பணிப்புக்களைப் பரிசீலனை செய்வதற்கு, அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சந்தர்ப்பமும் தவிசாளருக்கு அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக கருதப்படும்.

26. தவிசாளர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தயாரிக்கப்படும் அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள ஏதேனும் மாதிரியொன்றை, அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாக அமையுமென்பதோடு, எந்தவோர் அனுமதிப்பத்திரதாரராலும் அத்தகைய கொள்வனவு செய்வதை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

27. இத்துணைவிதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடம் 10ஆவது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நியமங்களுக்கும் அமைய விளங்குதல் முடிவுறுமாயின் அல்லது இத்துணை விதிகளில் வேறேதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரதாரருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை தவிசாளர் அந்த அனுமதிப்பத்திரதாரருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

28. 27ஆவது துணைவிதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரதாரரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் தவிசாளருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதினான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

29. 28ஆவது துணைவிதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரதாரரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை தவிசாளரால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

30. இத்துணைவிதிகளின் ஏதேனும் ஏற்பாடு ஒன்றையோ அல்லது பலவற்றையோ பிரதேச சபைப் பிரதேசத்தினுள் எவரேனும் நபர் மீறுவது 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 122(2) இன் ஏற்பாடுகளுக்கமைவாக நியாயாதிக்கமுள்ள நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டதன் பேரில்:-

(i) அந்நபர் குற்றவாளியாகக் காணப்பட்ட தவறொன்றுக்காக ரூபா 750.00 அபராத விதிப்பு செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன்,

(ii) அந்நபரால் குறித்த குற்றம் தொடர்ச்சியாகப் புரியப்படுகின்ற அத்தகைய சந்தர்ப்பத்தில் தொடரப்படுகின்ற நாள் ஒன்றுக்கு ரூபா 250.00 அபராத விதிப்பும் செலுத்தப்படுதல் வேண்டும்.

31. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இத்துணைவிதிகளில்,-

**'பிரதேச சபைப் பிரதேசம்'** என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபை அமைந்துள்ள நியாயாதிக்க பிரதேசத்தையும் ;

**'பிரதேச சபை'** என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபையையும் ;

**'அனுமதிப்பத்திரதாரர்'** என்பது, இத்துணைவிதிகளிலான பணிப்புக்களின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள எவரேனும் ஆள் எனக் கருதப்படுவதோடு மேற்படி அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் பொறுப்பாளியோ, முகாமையாளரோ அப்போதைக்கு அவ்விடத்தின் பணிகளை நிர்வகிக்க பொறுப்பாகவுள்ள எவரேனும் ஆளையும் ;

**'அனுமதிப்பத்திரம் பெற்ற இடம்'** என்பது, இத்துணைவிதிகளிலான பணிப்புக்களின் கீழ் எந்த இடத்தைப் பாவிக்க அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோ, அந்த இடத்தையும் ;

**'அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்'** என்பது, அக்கருமத்திற்காக தவிசாளரால் ஆவணமொன்றினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பிரதேச சபையின் எவரேனும் உத்தியோகத்தரையும் ;

**'செயலாளர்'** என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபையின் செயலாளரையோ அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கருமங்கள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தரையும் ;

**'தவிசாளர்'** என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபையின் தவிசாளரையும்
குறிக்கும்.

**'சிற்றுண்டிச்சாலை அல்லது சாப்பாட்டுக்கடை'** என்பது, விற்பனைக்காக சோறு மற்றும் கறிகளை சமைக்கும் அல்லது வைக்கப்படும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் இடங்கள் கருதப்படுவதோடு, உணவு வேளைக்காக உணவுக்குப் பொருத்தமான வேறு ஏதேனும் ஆக்கப்பட்ட உணவு வகைகள் அல்லது ஏதேனும் சிற்றுண்டி வகைகளை விற்பனையின் பொருட்டு தயரிக்கப்பட்ட அல்லது வைக்கப்பட்ட அல்லது காட்சிக்கு வைக்கப்படும் இடத்தையும் உள்ளடக்கும்.

**'தேநீர் அல்லது கோப்பிக்கடை'** என்பது, வெதுப்பகத் தாயாரிப்புகள் அல்லது வேறு சிற்றுண்டிகளுடன் தேநீர் அல்லது கோப்பி விற்பனை செய்வதற்காக நடாத்தப்பட்டுவரும் இடம் எனக் கருதுதல் வேண்டும்.

01-909/4

---

**கிழக்கு மாகாண மாகாண சபை**

துணைவிதிகள்

**மண்முனை மேற்கு பிரதேச சபை**

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவு (1) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1989ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள்) சட்டத்தின் பிரிவு 2 இனால் கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சராகிய நஸீர் அகமட் ஆகிய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள

தத்துவங்களுக்கமைவாக, 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 126 விடயம் (XXIII) இன் கீழ் **மண்முனை மேற்கு** பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்டுள்ள சிகை அலங்கார நிலையங்கள், நாவிதர் சாப்புகள் மற்றும் சலூன்கள் அத்துடன் உடல்வனப்புக்கலை நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகள் என்னால் அங்கீகரிக்கப்பட்டமையை பகிரங்கப்படுத்த இத்தால் கட்டளையிடுகின்றேன்.

நஸீர் அகமட்,
கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும்
உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்.

கிழக்கு மாகாண முதலமைச்சுச் செயலகம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை,
2015, நவெம்பர் 06.

**சிகை அலங்கார நிலையங்கள், நாவிதர் சாப்புகள் மற்றும் சலூன்கள் அத்துடன் உடல்வனப்புக்கலை நிலையங்கள் பற்றிய துணைவிதிகள்**

இத்துணை விதிகள் இதனகத்துப்பின்னர் பிரதேச சபை என அழைக்கப்படும் **மண்முனை மேற்கு** பிரதேச சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் சிகை அலங்கார நிலையங்கள், நாவிதர் சாப்புகள் மற்றும் சலூன்கள் அத்துடன் உடல்வனப்புக்கலை நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. தவிசாளரால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமின்றி சிகை அலங்கார நிலையமொன்றை, நாவிதர் சாப்பொன்றை, சலூனொன்றை அல்லது உடல்வனப்புக்கலை நிலையமொன்றை நடாத்துதல் ஆகாது.

3. இத்துணைவிதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப் பத்திரங்களும் இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

4. இத்துணைவிதிகள் வலுவிற்கிடப்படுகின்ற தினத்திற்கு முன்னரான காலப்பகுதியில் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் செயற்பாட்டில் இருக்கின்ற சிகை அலங்கார நிலையங்கள், நாவிதர் சாப்புகள் மற்றும் சலூன்கள் அத்துடன் உடல்வனப்புக்கலை நிலையங்களுக்கு துணைவிதி 2 இன் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகாது என்பதுடன் அத்தகைய சிகை அலங்கார நிலையமொன்றை, நாவிதர் சாப்பொன்றை சலூனொன்றை அல்லது உடல்வனப்புக்கலை நிலையமொன்றை இதனகத்துப்பின்னரான ஏற்பாடுகளுக்கமைவாக அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய காலப்பகுதிக்குள் அத்தகைய நபர்கள் சிகை அலங்கார நிலையமொன்றை, நாவிதர் சாப்பொன்றை மற்றும் சலூனொன்றை அத்துடன் உடல்வனப்புக்கலை நிலையமொன்றைக் கொண்டு நடாத்துதல் இத்துணைவிதிகளின்கீழ் சட்டமுறையானதாதலும் வேண்டும்.

5. பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானித்து அறவிடப்படுகின்ற கட்டணமொன்றினைச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்படுகின்ற அனுமதிப்பத்திரமொன்றின் ஊடாக எவரேனும் நபர் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் ஏதேனும் சிகை அலங்கார நிலையமொன்றை, நாவிதர் சாப்பொன்றை, சலூனொன்றை அல்லது உடல்வனப்புக்கலை நிலையமொன்றைக் கொண்டு நடாத்த அனுமதிப்பத்திரமொன்றிற்கு விண்ணப்பிக்கலாம்.

6. எவையேனும் நியாயமான காரணங்கள் இருந்தாலன்றி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற தினத்திலிருந்து பதினான்கு வேலை நாட்களுக்குள் அத்தகைய நபருக்கு அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவது பிரதேச சபையின் கடமையாதல் வேண்டும்.

7. இத்துணைவிதிகளின் கீழ் பிரதேச சபையினாலோ அல்லது தவிசாளராலோ அல்லது எவரேனும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தராலோ எவரேனும் ஆளுக்கு விடுக்கப்பட்ட அறிவித்தலொன்று,-

(அ) அத்தகைய அறிவித்தல் கிடைக்க வேண்டியவருக்கு தபாலில் அனுப்பி வைக்கப்படுவதற்காக உறுதிசெய்யப்பட்டதென்பதை நிருபிக்கக்கூடிய வகையில் தபாலுக்காக ஒப்படைக்கப்பட்டால் ; அல்லது

(ஆ) அவரிடம் அல்லது அவரது முகவரியில் அப்போதைக்கு குடியமர்ந்துள்ள எவரேனும் ஆளிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பின் ; அல்லது

(இ) அவர் குடியமர்ந்துள்ள இடத்தில் அல்லது அவரால் தனது பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற இடத்தில் எந்தவோர் இடத்திலும் ஒட்டப்பட்டிருப்பின் அத்தகைய அறிவித்தல் முறையாக ஒப்படைக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டுமென்பதோடு அது எவ்விதத்திலேனும் ஒப்படைக்கப்படுவது சட்டமுறையானதாக அமைதலும் வேண்டும்.

8. இத்துணைவிதிகளின் ஏதேனும் பகுதியொன்றிலான ஏற்பாடுகளின் கீழ் தவிசாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஏதேனும் கருமம் அல்லது பணி, அவரால் பிரதேச சபையின் உத்தியோகத்தர் எவருக்கேனும் எழுத்துமூலம் பணிக்கப்படுகின்ற பணிப்புகளுக்கு கட்டுப்பட்டதாக ஒப்படைக்கப்பட முடியுமென்பதோடு அவ்வாறான அதிகாரம் பெற்ற ஆளொருவரினால் அத்தகைய சாட்டுதல் கடிதத்தில் பணிக்கப்பட்டுள்ள பணிப்புக்களுக்கு கட்டுப்பட்ட வகையில் செயற்படுதல் சட்டமுறையானதாக அமைவதோடு அத்தகைய கருமம் அல்லது பணி இத்துணைவிதிகள் மூலமாக தவிசாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் அவரால் புரியப்பட்ட கருமம் அல்லது பணியாகக் கருதப்படுதலும் வேண்டும்.

9. இத்துணைவிதிகளின் ஏதேனும் பகுதியொன்றிலான பணிப்பு அல்லது பணிப்புக்களின் கீழ் அனுமதிப்பத்திரம்பெற்ற இடமொன்றைப் பரிசோதனை செய்ய தவிசாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டுமென்பதோடு எவரேனும் அனுமதிப்பத்திரதாரரால் பரிசோதனை செய்ய அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அனுமதிப்பத்திரதாரரின் கருமமாக அமைதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஏதேனும் பரிசோதித்தலைத் தடுக்கவோ தடையேற்படுத்தவோ கூடாது.

10. (அ) இத்துணைவிதிகளின் (ஆ) மற்றும் (இ) பிரிவுகளில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தால் அன்றி, தவிசாளரால் எந்தவோர் ஆளுக்கும் சிகை அலங்கார நிலையம், நாவிதர் சாப்பு மற்றும் சலூன் அத்துடன் உடல்வனப்புக்கலை நிலையமொன்றைக் கொண்டு நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.

(ஆ) சிகை அலங்கார நிலையம், நாவிதர் சாப்பு மற்றும் சலூன் அத்துடன் உடல்வனப்புக்கலை நிலையமொன்றைக் கொண்டு நடாத்துவதற்கு எண்ணியுள்ள கட்டடம் அல்லது கட்டிடத்தின் பாகம் :-

(i) திடகாத்திரமாக முடிவுறுத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒரு வாடிக்கையாளருக்கு சேவை வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் அளவு ஆகக் குறைந்தது 1.5 மீற்றருக்கு குறையாதவாறு ஒரு சந்தர்ப்பத்தில் சேவை வழங்கும் வாடிக்கையாளரின் எண்ணிக்கைக்கேற்ற அளவிலான இடவசதி இருத்தல் வேண்டும் ;

(ii) சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு வருகைதரும் எந்தவோர் வாடிக்கையாளருக்கும், சேவையைப் பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்கள் அமர்ந்திருக்கும் இடத்திலிருந்து குறைந்தது 1.5மீற்றர் தூரம் இடைவெளி உள்ளவாறு இலகுவாக அமர்ந்திருப்பதற்கு போதியளவு இடவசதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) உள்ளடங்குகின்ற சுவர்கள் சக்திவாய்ந்த பொருட்களால் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தலும் வேண்டும் ;

(iv) உள்ளடங்குகின்ற கூரை மரத்தினால் அல்லது உறுதியான பொருட்களால் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, குறைந்தபட்சம் நிலமட்டத்திலிருந்து 2.25 மீற்றர் உயரத்தைக் கொண்ட உட்கூரையைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும், உட்கூரைக்கு வெள்ளை நிற வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும் ;

(v) உட்புறத் தரை சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டுமென்பதுடன், சுவரும் தரையும் சேரும் இடங்களை சுத்தப்படுத்துவதை இலகுவாக்கும் வகையில் வளைவு வடிவத்தில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(vi) உட்புறம் எயர்கொண்டிஷனர்கள் பொருத்தப்படாத கட்டிடமொன்றாயின், அதன் தரையின் பரப்பளவின் பதினைந்திலொரு பங்கிற்குக் குறையாத ஜன்னல்கள் பொருத்தப்படல் வேண்டுமென்பதுடன், போதியளவு வெளிச்சத்தைப் பெறக்கூடிய ஏற்பாடுகளையும் செய்திருத்தல் வேண்டும்

(vii) உட்புறம் எயர்கொண்டிஷனர்கள் பொருத்தப்பட்ட கட்டிடம் ஒன்றாயின் போதியளவு மின்சார வெளிச்சம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(viii) வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்குகையில் கழுவுவதற்காக நீர் உபயோகப்படுத்தப்படின், அதற்கேதுவாக பேசின் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், பாவனையின் பின்னர் கழிவுநீர் பாய்ந்தோடுவதற்கு போதியளவு நீர்க்குழாய்கள் பொருத்தப் பட்டிருத்தல் வேண்டும் ;

(ix) உள்ளே பாவித்து அப்புறப்படுத்தப்படும் கழிவுநீர் உறிஞ்சக்கூடிய கிடங்கினுள் பாய்ந்தோடுவதற்கு வழியமைத்தல் வேண்டுமென்பதோடு, பொது நீர் மார்க்கங்களுக்கு பாய்ந்தோடாதவாறு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் ;

(x) உட்புறம் அல்லது வளவினுள் நீரடைக்கப்பட்ட மலசலகூட வசதிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(xi) உட்புறம் வீட்டுச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படல் ஆகாதென்பதுடன், வீடொன்றாக உபயோகிக்கும் பாகத்திலிருந்து தனிவேறாக இருத்தல் வேண்டும்.

(இ) சிகை அலங்கார நிலையங்கள், நாவிதர் சாப்புகள் மற்றும் சலூன்கள் அத்துடன் உடல்வனப்புக்கலை நிலையங்கள் :-

(i) வாடிக்கையாளர்களுக்காக திறந்திருக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் போதியளவு நீர் வழங்கல் ;

(ii) சேவைகளை மேற்கொள்கையில் உபயோகிக்கும் உபகரணங்கள் மற்றும் கருவிகளைக் கிருமி நீக்கும் பொருட்டு போதுமானளவு நீரைக் கொதிக்க வைக்கும் முறையொன்று அல்லது கிருமி நீக்கும் முறையொன்று அத்துடன் கிருமி நீக்கும் பொருட்டு பாவிப்பதற்குப் போதியளவு பாத்திரங்கள் ;

(iii) உள்ளே பணிபுரிபவர்களுக்கு அவர்களின் சேவைகளை மேற்கொள்ளும் பொழுது கைகளைக் கழுவிக்கொள்ள வசதியாக பேசின் மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் ;

(iv) வாடிக்கையாளரின் உபயோகத்திற்காக வெள்ளை நிறமுடைய அல்லது வேறு இள நிறங்களைக் கொண்ட ஆனால் கடும் நிறங்கள் அல்லாத துவாய்கள் மற்றும் போதியளவு எண்ணிக்கை கொண்ட மேலாடைக் கவசங்கள் ;

(v) உள்ளே வெட்டப்படும் சிகை மற்றும் ஏனைய கழிவுப் பொருட்களைப் போடுவதற்கான நன்றாக மூடக்கூடிய மூடியைக் கொண்டதும் அங்குமிங்கும் கொண்டுசெல்லக் கூடியதுமான பாத்திரங்கள் ;

(vi) உள்ளே மின்சாரத்தின் மூலம் இயங்கும் உபகரணங்கள் உபயோகிக்கப்படுவதாயின், வாடிக்கையாளரின் மேசை ஒவ்வொன்றிலும் குறைந்த பட்சம் ஒரு பாதுகாப்பு மின்சாரப் பிளக் வீதம் ;

(vii) பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரால் பணிக்கப்பட்டவாறு போதியளவு முதலுதவி உபகரணங்களும் மருந்துகளுடன்கூடிய முதலுதவிப் பெட்டியொன்றும் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. இத்துணைவிதிகளின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட எல்லா நிலையங்களிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்களுக்கு, பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரால் சிபாரிசு செய்யப்படும் அளவிலான முதலுதவிப் பயிற்சியொன்றும் ஆகக்குறைந்தது வருடத்திற்கொரு தடவை வீதம் முதலுதவி ஒத்திகையும் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

12. இத்துணைவிதிகளுக்கமைய அனுமதிப்பத்திரம் பெற்ற அனைத்து ஆட்களாலும் குறிப்பிட்டவாறு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட இடத்தில் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமெனப் பணிக்கப்பட்ட இடங்கள் ஆகக்குறைந்தது வருடத்திற்கொரு தடவை வீதம் வர்ணப்பூச்சு பூசப்படுதல் வேண்டும்.

13. இத்துணைவிதிகளுக்கமைய அனுமதிப்பத்திரம் பெற்ற அனைத்து ஆட்களாலும் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள இடத்தின் தரை ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கிருமிநாசினிகள் உபயோகித்து கழுவப்படுதல் வேண்டும்.

14. இத்துணைவிதிகளுக்கமைய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ள இடத்தைப் பகல் அல்லது இரவு வேளைகளில் நித்திரைசெய்யும் அல்லது உணவு உண்ணும் இடமாகப் பாவித்தல் ஆகாதென்பதோடு, வேறு எந்தவோர் ஆளையும் அவ்வாறு பாவிக்க இடமளித்தலும் ஆகாது.

15. இத்துணைவிதிகளுக்கமைய அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள இடத்தினுள் உணவு சமைத்தல் அல்லது உணவு விற்பனை அல்லது விற்பனைக்காக உணவைக் காட்சிக்கு வைத்தல் ஆகாது.

16. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால்அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு சிகை அலங்கார நிலையம், நாவிதர் சாப்பு மற்றும் சலூன் அத்துடன் உடல்வனப்புக்கலை நிலையத்திலும் எவ்வகையான வியாபாரத்திலும் அல்லது அத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவி சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட இடத்தில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

(இ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவை வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப்பத்திரதாரரின் கடமையாகும்.

17. ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் வாடிக்கையாளருக்கு சேவை வழங்கிய பின்னர்: -

(அ) அவ்வாறு சேவை வழங்கிய ஆள் ஏதேனும் கிருமிநாசினி திரவத்தை உபயோகித்து தமது இரு கைகளையும் சுத்தம் செய்த பின்னர் அன்றி வேறு எந்தவொரு வாடிக்கையாளருக்கும் பணியாற்றுதல் அல்லது சேவையாற்ற இடமளித்தல் ஆகாது.

(ஆ) அவ்வாறு வாடிக்கையாளருக்கு பாவித்த எவ்வகையான உபகரணமும் கிருமி நீக்கப்பட்டிருந்தாலேயன்றியும் பாவித்த துவாய் மற்றும் மேலாடைக் கவசங்கள் கிருமிநாசினி அல்லது சவர்க்காரம் உபயோகித்து கழுவப்பட்டிருந்தாலேயன்றியும், வேறு எவரேனும் வாடிக்கையாளருக்கு பாவித்தலோ அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளித்தலோ ஆகாது.

18. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல ஊழியரும் :-

(அ) தினந்தோறும் நீராடிய அல்லது குளித்த பின்னர் மாத்திரமே சேவையில் ஈடுபடுகின்றனர் என்பதையும் ;

(ஆ) அணியும் ஆடை அணிகள் சுத்தமாகவும் சுகாதார நிலையிலும் உள்ளன என்பதையும் ;

(இ) நகங்களைக் கட்டையாக வெட்டி சுத்தமாக வைத்திருக்கின்றனர் என்பதையும் ;

(ஈ) ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் பணி தொடங்குவதற்கு முன்னர் சவர்க்காரம் உபயோகித்து கைகளைக் கழுவிக்கொள்கின்றனர் என்பதையும்

உறுதி செய்துகொள்ளல் அனுமதிப்பத்திரதாரரின் கடமையாகும்.

19. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் -

(அ) உபகரணங்கள் பாவிக்கப்படும் ஒவ்வொரு தடவையின் பின்னரும் கிருமி நீக்கம் செய்தலையும் ;

(ஆ) தூரிகைகள் மற்றும் சீப்பு போன்றவை ஒவ்வொரு நாளும் பாவனைக்கு முன்னர் நன்றாகக் கழுவிச் சுத்திகரித்து கிருமி நீக்கம் செய்தலையும் ;

(இ) சகல பேணிகள், கோப்பைகள் மற்றும் சவர்க்காரத் தூரிகைகள் போன்றவை, பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் ஒவ்வொரு தடவையின் பின்னரும் கொதிநீரில் அமிழ்த்தி கழுவுதலையும் உறுதி செய்துகொள்ளல் அனுமதிப்பத்திரதாரரின் கடமையாகும்.

20. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் சேவையைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு வாடிக்கையாளரினதும்: -

(அ) சிகை அல்லது சவரஞ் செய்கையில் அப்புறப்படுத்தப்படும் வெட்டப்பட்ட மயிர்த் துண்டுகள் அல்லது வேறு கழிவுப் பொருட்களைக் கூட்டித் துப்புரவாக்குதலையும் அல்லது மின்சாரம் மூலம் உறுஞ்சி இழுக்கும் இயந்திரத்தின் மூலம் சேகரித்து அதற்காக ஒதுக்கப்பட்ட பாத்திரத்தில் இடுதலையும் ; அத்துடன்

(ஆ) சிகை அல்லது சவரஞ் செய்வதற்கு உபயோகிக்கப்படும் சவரக் கத்தியில் சவர பிளேடுகளை மாற்றுதலையும்

உறுதி செய்துகொள்ளல் அனுமதிப்பத்திரதாரரின் கடமையாகும்.

21. நாளாந்த நடவடிக்கைகளின் முடிவில் அல்லது தேவைப்படின் நாளொன்றுக்குப் பல தடவைகள் என்றவாறு வெட்டப்பட்ட மயிர்த்துண்டுகள் உள்ளிட்ட பாத்திரத்திலுள்ள கழிவுப் பொருட்கள் ஆகக் குறைந்தது நிலத்தில் ஒரு மீற்றருக்குக் குறையாத ஆழத்தில் புதைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் அனுமதிப்பத்திரதாரரின் கடப்பாடாகும். அவ்வாறு அப்புறப்படுத்தப்படும் வெட்டப்பட்ட மயிர்த் துண்டுகள் அல்லது வேறு கழிவுப் பொருட்கள் காற்றில் பறந்து செல்லல் அல்லது சுற்றாடலில் ஏதேனும் பொது இடத்திற்கு பறந்து செல்வதைத் தடுக்கும் நடவடிக்கை எடுத்தல் அனுமதிப்பத்திரதாரரின் கடமையாகும்.

22. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் சேரும் வெட்டப்பட்ட மயிர்த் துண்டுகள் மற்றும் ஏனைய கழிவுப் பொருட்கள் 20ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டவாறு அகற்றுவதற்கு இயலாத சந்தர்ப்பத்தில் பிரதேச சபையின் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ நடைமுறையின்கீழ் பணிக்கப்பட்டவாறு பிரதேச சபையின் குப்பை சேகரித்தல் வாகனத்திற்கு ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

23. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உபயோகிக்கப்படும் பாத்திரங்களை அவற்றிலுள்ள கழிவுப் பொருட்களை அகற்றிய பின்னர் சுத்தஞ் செய்து கிருமிநாசினி இடுதல் அனுமதிப்பத்திரதாரரின் கடமையாகும்.

24. ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் :-

(அ) ஏதேனும் வகையில் அல்லது குருதி நிறுத்தல் பென்சில் அல்லது பவுடர்தடவும் தூரிகை அல்லது வேறுபொருட்கள் ;

(ஆ) எந்தவொரு குருதிப்பாய்வை நிறுத்தும் செயலுக்காக சீனக்காரம் அல்லது வேறு திரவம், அவை தூளாக அல்லது திரவமாக இருந்தாலன்றி எந்தவோர் வாடிக்கையாளரின் பொருட்டு பாவித்தல் அல்லது பாவிப்பதற்கு இடமளித்தல் ஆகாது.

25. எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலும் அனுமதிப்பத்திரதாரரால் சுத்தமான நிலையில் அல்லாத மேலாடைக் கவசங்கள் அல்லது கழுவிய பின்னர் முதற் தடவையாகப் பாவிக்கும் துவாய் அல்லாத ஏதேனும் துவாய் அல்லது மேலாடைக் கவசமாக வாடிக்கையாளரின் பாவனைக்காக உபயோகித்தல் ஆகாது.

26. இத்துணைவிதிகளுக்கு அமைய அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திற்கு விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட கருமங்களைத் தவிர்ந்த வேறு எந்தவொரு கருமத்தையும் தவிசாளரின் எழுத்து மூலமான அனுமதி இருந்தால் அன்றி செய்தல் ஆகாது.

27. இத்துணைவிதிகளின் பணிப்புக்களைப் பரிசோதிப்பதற்கு தவிசாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக, வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கும் எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

28. இத்துணைவிதிகளுக்கமைய அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் இடத்தில் 10ஆவது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய நிலவுதல் முடிவுறுமாயின் அல்லது இத்துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்தப் பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரதாரருக்குக் கட்டளையிடும் அறிவித்தலொன்றை தவிசாளர் அந்த அனுமதிப்பத்திரதாரருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

29. 28ஆவது துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரதாரரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்கள் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் தவிசாளருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

30. 29ஆவது துணைவிதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரதாரரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் தவிசாளரால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

31. இத்துணைவிதிகளின் ஏதேனும் ஏற்பாடு ஒன்றையோ அல்லது பலவற்றையோ பிரதேச சபைப் பிரதேசத்தினுள் எவரேனும் நபர் மீறுவது 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 122(2) இன் ஏற்பாடுகளுக்கமைவாக நியாயாதிக்கமுள்ள நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டதன் பேரில்:-

(i) அந்நபர் குற்றவாளியாகக் காணப்பட்ட தவறொன்றுக்காக ரூபா 750.00 அபராத விதிப்பு செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன்,

(ii) அந்நபரால் குறித்த குற்றம் தொடர்ச்சியாகப் புரியப்படுகின்ற அத்தகைய சந்தரப்பத்தில் தொடரப்படுகின்ற நாள் ஒன்றுக்கு ரூபா 250.00 அபராத விதிப்பும் செலுத்தப்படுதல் வேண்டும்.

32. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இத்துணைவிதிகளில்: -

**'பிரதேச சபைப் பிரதேசம்'** என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபை அமைந்துள்ள நியாயாதிக்க பிரதேசத்தையும் ;

**'பிரதேச சபை'** என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபையையும் ;

**'அனுமதிப்பத்திரதாரர்'** என்பது, இத்துணைவிதிகளிலான பணிப்புக்களின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள எவரேனும் ஆள் எனக் கருதப்படுவதோடு மேற்படி அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் பொறுப்பாளியோ, முகாமையாளரோ அப்போதைக்கு அவ்விடத்தின் பணிகளை நிர்வகிக்க பொறுப்பாகவுள்ள எவரேனும் ஆளையும் ;

**'அனுமதிப்பத்திரம் பெற்ற இடம்'** என்பது, இத்துணைவிதிகளிலான பணிப்புக்களின் கீழ் எந்த இடத்தைப் பாவிக்க அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோ, அந்த இடத்தையும் ;

**'அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்'** என்பது, அக்கருமத்திற்காக தவிசாளரால் ஆவணமொன்றினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பிரதேச சபையின் எவரேனும் உத்தியோகத்தரையும் ;

**'செயலாளர்'** என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபையின் செயலாளரையோ அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கருமங்கள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தரையும் ;

**'தவிசாளர்'** என்பது, **மண்முனை மேற்கு** பிரதேச சபையின் தவிசாளரையும்
குறிக்கும்.

**'மேலாடைக் கவசம்'** என்பது, அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் சேவையைப் பெற்றுக்கொள்ளும் எவரேனும் வாடிக்கையாளரின் உடலின் மேற்பகுதியை மூடுவதற்காக உபயோகிக்கும் ஏதேனும் போர்வைத் துணியெனக் கருதப்படும்.

01-909/5

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.